தரம் 5 - 11 வரை

எண்: 06 எழுத்து: 05
மே 2012

AHARAM அகரம்

ஐடியா கூட்டணி

மே - 01 தொழிலாளர் தினம்

World Today

Des: Sinan

30/-

[illegible] சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.facebook.com/aharamJmf

facebook Search

LONDON 2012

AHARAM அகரம்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Aharam
178 likes · 17 talking about this

✔ Liked | Message

Magazine
அகரம் - மாணவர்களுக்கான மாதாந்த சஞ்சிகை.

178

Aharam
Yesterday

"நான் இன்னும் சரித்திர நாயகன் என்ற இடத்தை எட்டவில்லை. ஆனால், அதற்கான பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறேன். லண்டனில் பங்கேற்கும்போது மக்களை வியப்பில் ஆழ்த்தும் மாபெரும் சாதனைகள் புரிந்து அந்த இடத்தை அடைய வேண்டும் என்பது என் கனவு.

– உசைன் போல்ட்,
குறுந்தூர ஓட்டப் பந்தய வீரர், ஜமேக்கா

Like · Comment · Share

Aharam
April 2

"உலகச் சம்பியன் என்ற நிலையை எட்டியது நிச்சயம் ஒரு விவரிக்க முடியாத அற்புத உணர்வு. இதனை அனுபவித்துச் சொல்லக்கூடியவர்கள் உலகில் வெகு சிலர்தான்.

– அலிஸ்டெர் பிரவுன்லீ, டிரையத்லான் போட்டிகளில் இரண்டு முறை உலகச் சம்பியன் பட்டம் வென்றவர்,

ஒலிம்பிக் கனவுகள்

Aharam
April 19

"ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்புக்காக என்னுடைய எல்லா திறமையையும் வெளிப்படுத்தி விளையாடுவேன். எனக்கு அந்த அவா இருக்கிறது.

– ஹைதர் ரஷீத், துடுப்பு படகு வீரர், ஈராக்

"என் சொந்த நாடான கொசோவோவை விட்டு விட்டு வேறு நாட்டுக்காக வந்து விளையாடுமாறு பல பெரிய நாடுகள் என்னிடம் வேண்டுகோள் விடுத்தன. ஆனால், நான் மறுத்து விட்டேன். கொசோவோவுக்காக விளையாடி எதனையும் சாதிக்க முடியாது என்று யாரும் என்னிடம் சொல்வதை நான் விரும்பவில்லை. அதை சாதித்துக் காட்டுவதே எனது இலட்சியம்.

–மைலிண்டா கெல்மெண்டி,
ஜூடோ வீராங்களை, கொசோவோ

facebook www.facebook.com/aharamJmf

Like செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 MAY 2012

அகரம்

எண்: 06 மே, 2012 எழுத்து: 05

உள்ளே...

06

14

12

நாளைய தலைவர் நீங்கள் 27


ஐ யா கூட்டணி 20

AFAQ கலைக்களஞ்சியம் 37

பாடத்திட்டம்

வரலாறு	17	தமிழ்	25
விஞ்ஞானம்	31	புலமைப் பரிசில்	39

கலாநிதி வஹ்பா முஸ்தபா ஸ்ஹைலி 34


08

30

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
ஏ.ஏ.முஹம்மத் பவாஸ் (இஸ்லாஹி)

சந்தா விபரம்
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமட்டகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: aharamipc@gmail.com
www.facebook.com/aharamJmf

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

பலன் ஈட்ட செலவு செய்வோம்

அகரம் மீண்டும் புத்துணர்வோடு உங்கள் கரங்களில் தவழ்வதில் பெருமிதமடைகின்றோம், அல்ஹம்துலில்லாஹ்.

2011 நவம்பர் மாத இதழில் வறுமையில் வாடும் வகுப்புத் தோழமைகளுக்கு உபகாரம் செய்வதற்கான ஆலோசனையொன்றை உங்களோடு நாம் பகிர்ந்து கொண்டது நினைவிருக்கும் என நம்புகின்றோம். அதுபோலவே எங்களுக்காக நாம் செலவு செய்வதில் எதற்கு முன்னுரிமை வழங்குகிறோம் என்பது குறித்து இவ்விதழில் மீள்பரிசீலனை செய்வோம்.

ஆடம்பரம், பகட்டு என்பன எப்படி சமூகத்தைப் பாதித்துள்ளதோ அதற்கு சற்றும் குறைவின்றி இப்பண்புகள் மாணவ சமூகத்தையும் படுமோசமாகப் பாதித்துள்ளது. தேவை எது? முன்னுரிமைப்படுத்த வேண்டியவை எவை? என சிந்தித்து கருமமாற்றும் மாணவர்கள் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றனர். பயனற்றவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவசியமற்ற உணவுப் பொருட்களை வாங்கி உண்ணுவதற்கும் தாராளமாக செலவு செய்கின்ற ஒரு நடத்தையை மாணவ சமூகத்தில் காணக்கூடியதாக உள்ளது.

உதாரணமாக பாடசாலை கல்விச் சுற்றுலா ஒன்றின்போது பெற்றோரின் பொருளாதார நிலைமை பயணக் கொடுப்பனவைத் தீர்மானிக்கும். ஆனால், சுற்றுலா ஏற்பாட்டிற்கும் சுற்றுலாவின்போதும் மாணவர்கள் பணத்தை செலவு செய்யும் விதம் பேரதிர்வை ஏற்படுத்தி விடுகின்றது.

அதுமட்டுமன்றி, பாடசாலை நாட்களிலும் மாலை நேர வகுப்புகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களிலும் தின்பண்டங்களுக்கும் நொறுக்குத் தீனிகளுக்கும் மாணவர்கள் செலவு செய்யும் விதம் எமக்கு கவலையை உண்டுபண்ணுகின்றது. ஜமீன்தார் வீட்டுப் பிள்ளைகள் போல் அவர்களது செலவினம் வீணாக அமைந்து விடுகின்றது.

மறுபுறம் ஆச்சரியத்தையும் கவலையையும் அளிக்கும் விடயம் என்னவென்றால், பயனுள்ள பணிக்கு 5 ரூபா கூட செலவு செய்வதற்கோ நல்ல நூலொன்றை விலைகொடுத்துப் பெற்றுக் கொள்வதற்கோ உள்ளம் சிறிதும் இடம்கொடுக்காமல் இருப்பதாகும். நல்ல விடயங்களுக்கு நாளாந்தம் 30, 40 ரூபாய்கள் செலவு செய்வது அத்தியவசியமற்றவைகளுக்காக செலவு செய்வதை விட கஷ்டமானதாக, பேரிடியாக மாணவ சமூகத்திற்கு தோன்றுகின்றது. இது துர்ப்பாக்கியம்! பேராபத்து!!

கட்டுப்பாடற்ற செலவினத்திற்கும் நொறுக்குத் தீனிகளுக்கும் அவசியமற்றவைகளுக்காகவும் 'ஜொலி' வாழ்க்கைப் போக்கிற்காகவும் செலவு செய்யும் மோசமான மனோநிலையும் மாணவ சமூகத்தைப் பீடித்துள்ள பிணியாகும். இப்பிணி நீங்க மருத்துவம் செய்ய வேண்டும்; நீண்ட பயிற்சிகளை மாணவ சமூகம் பெற வேண்டும்.

நற்பணிகளுக்கு செலவு செய்யவும் அறிவுக் கருவூலங்களான சிறந்த நூற்களையும் பயனுள்ள சஞ்சிகைகளையும் விலை கொடுத்துப் பெற்று வாசித்துப் பயன்பெறும் பண்பாடு மாணவ சமூகத்தில் வளர வேண்டும். வருமானம் வந்த வழியும் அது செலவு செய்யப்பட்ட விதமும் மறுமையில் விசாரிக்கப்படும் என்பதும் மாணவர்களாகிய எம்மிடத்தில் ஆழ்ந்த கவனயீர்ப்பைப் பெற வேண்டும். அழியா செல்வங்களையும் மரணித்தும் பயனளிக்கும் பணிகளுக்கு செலவு செய்கின்ற பண்பாடு மிக்க மாணவர்களும் எம் மத்தியில் வளர வேண்டும். அதுவே நாமும் சமூகமும் பயன் பெற வழிசெய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

சென்ற இதழின் தொடர்...

"திண்ணமாக, நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் தூதராக அனுப்பினோம் (நூஹ் கூறினார்) நான் உங்களுக்குத் தெளிவாக எச்சரிக்கை செய்பவன் ஆவேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் நீங்கள் அடிபணியாதீர்கள்! அவ்வாறு செய்யவில்லையானால் துன்புறுத்தும் நாளின் வேதனை உங்களைப் பிடித்துக் கொள்ளுமோ என்று நான் அஞ்சுகிறேன்." (ஸூரா ஹூத்: 26-27)

இவ்வாறுதான் கப்பல் கட்டிய நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது இஸ்லாமியப் பணி ஆரம்பமானது. இரவும் பகலும் மாறிமாறி வந்து கொண்டே இருந்தன. சூரியன் கிழக்கையும் மேற்கையும் தொட்டுக் கொண்டே இருந்தது. நபி நூஹூம் தன் பணியை ஓயாது செய்து கொண்டே இருந்தார். அவர் அல்லாஹ்வை நோக்கி மக்களைஅழைப்பதும் அவர்களோ சொல்லாலும் செயலாலும் அவரைத் துன்புறுத்தி நோவினை செய்வதும் வழமையாகி விட்டன. அல்லாஹ்வின் அருள் நிறைந்த செய்திகளை மக்களுக்கு கொடுத்துவிட வேண்டும் என்ற கவலை நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது உள்ளத்தை நிறைத்திருந்தது.

இத்தகைய உழைப்பும் பிரசாரப் பணியும் ஓர் இரவும் பகலும் மட்டுமா? இல்லை, இல்லவே இல்லை! 950 ஆண்டுகள்...! என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

எத்துணை எத்துணை பொறுமையும் தியாகமும் சகிப்புத் தன்மையும் அந்த உள்ளத்தில் இருந்திருக்க வேண்டும்? அல்லாஹ்வின் தீன் மேலோங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பைத் தவிர வேறு எதுதான் அந்த உத்தம நபியின் எதிர்பார்ப்பாக இருந்திருக்க முடியும்!!

முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. மக்கள் நேர்வழி பெற்றிட வேண்டுமென்றே முயற்சித்தார். என்ன செய்வது? அல்லாஹ்வின் தீர்மானம் வேறு விதமாகவே அமைந்து விட்டது. நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அல்லாஹ்விடம் தன் முறையீட்டை முன்வைத்தார். நபியின் அழைப்புக்கு அல்லாஹ் பதில் அளிக்கும் வகையில் நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு கப்பல் கட்டுமாறு கட்டளையிட்டான். மறுத்து செயல்பட்டவர்களோடு உரையாடுவதை தவிர்த்துவிடுமாறும் அவர்கள் நீரில் மூழ்கடிக்கப்படுவார்கள் என்றும் அல்லாஹ் வஹி அறிவித்தான். தன் சமூகம் வாழும் இடத்தை விட்டும் தொலைவிலுள்ள வரண்ட இறுக்கமான நிலத்தை கப்பல் கட்டுவதற்கு நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தெரிவு செய்தார்கள்.

கடற்பரப்புக்கு நெருக்கமான இடத்தில் அல்லாமல் வரண்ட நிலத்தில் அவர்கள் கப்பல் கட்டினார்கள் என்று கேள்வி எழுகிறதா? நபி ஒரு வேலையைச் செய்தால் அது வஹியின் வழிகாட்டலாகத்தானே இருக்கும்?

அந்த மக்களும் நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை பரிகாசம் செய்யத் தொடங்கினார்கள். என்ன நூஹே, சில நாட்களுக்கு முன்னர் ரஸூல் என்றும் நபியென்றும் கூறினீர்கள். எப்போது தச்சனாக மாறினீர்கள்? நபித்துவப் பணியை விட்டு விட்டீர்களோ? தச்சுத் தொழில் புரிவதை இப்போது விரும்புகிறீர்களோ? நதிகளையும் சமுத்திரத்தையும் விட்டும் வெகு தொலைவில் கட்டப்படும் கப்பலுக்கு என்ன நிகழும்? காற்று அதனை சுமந்து செல்லும் என்றா எண்ணுகிறீர்? இப்படி எத்தனையோ பரிகாச வார்த்தைகள். ஆனால், அவர் கப்பலைக் கட்டி முடித்தார்.

கப்பல் கட்டிய நபி

ஈமான் கொண்டவர்களையும் மற்றும் எல்லா உயிரினங்களிலிருந்தும் ஒவ்வொரு சோடியையும் கப்பலில் ஏற்றிக் கொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். அவ்வாறே நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் தம் பணியை மேற்கொண்டார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RARY JAFFNA

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَانِسَاءَ الْمُسْلِمَاتِ لاَ تَحْقِرَنَّ جَارَةٌ لِجَارَتِهَا وَلَوْ فِرْسِنَ شَاةٍ (البخاري)

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "எந்த ஒரு பெண்மணியும் தன்னுடைய அண்டை வீட்டாரிடமிருந்து வரும் அன்பளிப்பை அற்பமானதாகக் கருதிவிட வேண்டாம். அது ஓர் ஆட்டின் குளம்பானாலும் சரியே!" (அல்புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸ் இரண்டு விடயங்களை எமக்குக் கற்றுத் தருகின்றது. எமக்கிடையில் அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொள்வதும் எமக்குக் கிடைக்கும் அன்பளிப்புகளை ஏற்றுக் கொள்வதுமே அவை.

அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ளல், அது தொடர்பான வழிமுறைகளைப் பேணல் போன்ற விடயங்களில் மாணவர்களாகிய எம்மிடமும் எமது சமூகத்திடமும் மிகவும் பலவீனமான ஒரு நடைமுறையே பின்பற்றப்படுகிறது. எனினும், இந்த விடயமானது இஸ்லாத்தின் அடிப்படையில் ஒரு சமூகம் கட்டியெழுப்பப்படுகின்றபோது அதன் உறுப்பினர்களிடையே பேணப்பட வேண்டிய மிக முக்கியமானதொரு முன்மாதிரியாகும். மாணவர்களாகிய நாம் எம்முடைய அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தும் வகையில் எமக்கிடையே இஸ்லாமிய வரையறைகளைப் பேணி அவ்வப்போது அன்பளிப்புக்களை பரிமாறிக் கொள்ள முடியும்.

எமது உறவுகள், நட்புகளுக்கிடையே நாம் அன்பாகப் பேசுவது, நல்ல பெயர்களால் அழைப்பது என்பன நாவால் நாம் அளிக்கும் அன்பளிப்புகள். இதன் மூலம் நம்முடைய அன்பை உரியவர்களுக்கு உணர்த்தி எமக்கிடையிலான நெருக்கத்தை அதிகரித்துக் கொள்ளலாம். இவ்வாறு நாவால் வழங்கப்படும் கொடைகள் உள்ளங்களை இணைத்து நெருக்கத்தை உண்டாக்குவதுபோல பொருட்களாக நாமளிக்கும் அன்பளிப்புகளும் நெருக்கத்தை அதிகரிக்கும். அன்பளிப்புகளை வழங்கிக் கொள்ளுங்கள் எனக் கூறிய நபியவர்கள் அதற்கான காரணத்தையும் கூறும்போது, "உள்ளங்களில் உள்ள மனக் கசப்பை அன்பளிப்புகள் அகற்றி விடுகின்றன" என்றார்கள். எமக்கிடையே அன்பளிப்புகளை கொடுத்துக் கொள்வதனாலும் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டிக் கொள்வதனாலும் மனக்கசப்புக்கள் அகன்று அன்புப் பாலம் ஸ்திரமடைகிறது.

நபித்தோழர்களுக்கு அண்ணலார் அன்பளிப்புகளை வழங்குவார்கள். நபித்தோழர்கள் அண்ணலாருக்கும் தங்களுக்கிடையிலும் அன்பளிப்புகளை வழங்கிக் கொள்வார்கள். இவற்றை மனதில் கொண்டு நாமும் எமக்கிடையில் அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ள முடியும்.

நம்மால் முடியுமான பொருட்களை அன்பளிப்பாகக் கொடுத்தால் போதும். விலையுயர்ந்த பொருட்களைத்தான் கொடுக்க வேண்டும் என்று எண்ணி கொடுக்காமல் இருந்துவிடக் கூடாது. எமது அன்பும் தூய எண்ணமும்தான் நெருக்கத்தை உண்டாக்குகின்றதே தவிர, பொருட்களின் விலையும் மதிப்பும் அல்ல. அதேபோன்று எத்தகைய பொருள் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டாலும் நன்றியோடும் கண்ணியத்தோடும் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அண்ணலார் தம் தோழர்களிடையே அன்பளிப்புகளை வழங்கி தமது நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொண்டதோடு தனது தோழர்களையும் அதன்பால் ஆர்வமூட்டினார்கள். இந்த நடைமுறைகளைப் பின்பற்றி நாமும் எமக்கிடையில் அன்பளிப்புகளைப் பரிமாறி எமது நட்புகளினதும் உறவுகளினதும் நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்வோம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாத் தொடுத்தலும் விபரங்களை அறிதலும்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸஹாபாக்களுடன் பத்ர் யுத்தத்திற்கு சென்றிருந்த வேளை அவர்கள் இருவரைக் கைது செய்தனர். குறைஷிகளின் யுத்தத்திற்கான தயாரிப்புகள் பற்றி அறிந்து கொள்ள விரும்பிய நபியவர்கள் அவ்விருவரையும் அழைத்து விசாரித்தார்கள்.

முஹம்மத் (ஸல்): குறைஷி களைப் பற்றி நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்.

கைதிகள்: நீங்கள் பார்க்கும் அந்தப் பெரிய மேட்டிற்குப் பின் குறைஷிகள் இருக்கிறார்கள்.

முஹம்மத் (ஸல்): அவர்கள் எத்தனை நபர்கள்?

கைதிகள்: மிக அதிகமாக இருக்கின்றனர்.

முஹம்மத் (ஸல்): அவர்களிடம் எப்படிப்பட்ட தயாரிப்புகள் உள்ளன?

கைதிகள்: தெரியாது.

முஹம்மத் (ஸல்): ஒவ்வொரு நாளும் எத்தனை ஒட்டகங்கள் அறுக்கிறார்கள்?

கைதிகள்: ஒரு நாள் ஒன்பது, மறுநாள் பத்து ஒட்டகங்கள் அறுக்கிறார்கள்.

முஹம்மத் (ஸல்): அவர்கள் தொள்ளாயிரத்திலிருந்து ஆயிரம் நபர்கள் வரை இருக்கலாம். குறைஷிப் பிரமுகர்களில் யார் யார் வந்திருக்கிறார்கள்?

கைதிகள்: உத்பா இப்னு ரபீஆ, ஷைபா இப்னு ரபீஆ, ஹக்கீம் இப்னு ஜாம், நவ்ஃபல் இப்னு குவைலித், ஹாரிஸ் இப்னு ஆமிர், துஅய்மா இப்னு அதி, நழ்ர் இப்னு ஹாரிஸ், ஜம்ஆ இப்னு அஸ்வத், அபூ ஜஹ்ல் இப்னு ஹிஷாம், உமய்யா இப்னு கலஃப் ஆகியோரும் மற்றும் பலரும் வந்திருக்கிறார்கள்.

முஹம்மத் (ஸல்): இதோ! மக்கா தனது ஈரக்குலைகளை உங்களுக்கு முன் கொண்டு வந்திருக்கிறது.

நபியவர்கள் யுத்தத்திற்கு சென்றிருக்கிறார்கள். எதிரிகளைப் பற்றிய விபரங்களைத் துல்லியமாகவும் சரியாகவும் அறிந்திருப்பதே வெற்றிக்கு வழியாகும். கைதிகள் இருவர் பிடிபட்ட போதுகூட அவர்களிடமிருந்து மிகத் துல்லியமாக பல விபரங்களை அறிய முற்படுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு விபரங்கள் சரியாகத் தெரியாதபோதும்கூட வித்தியாசமாக வினாத் தொடுத்து விபரங்களை அறிய முற்படுகிறார்கள். எதிரிகள் எத்தனை பேர் என்பதை அவர்கள் அறுக்கும் ஒட்டகங்களை வைத்து கணிப்பிடுகிறார்கள்.

எமக்கும் இவ்வாறாக முழு விபரங்களையும் பெற வேண்டிய தேவை, சந்தர்ப்பம் ஏற்படலாம். அப்போது நாம் பல வினாக்களைத் தொடுத்து விபரங்களை அறிய முடியும். பாடசாலைப் பாடங்களில் தெளிவில்லாத பகுதிகளை அறியவும் வினாக்களை எழுப்பலாம். மாணவர்களாகிய நீங்கள் இவ்வாறாக வினாக்களைத் தொடுப்பது உங்கள் கற்றலை மேம்படுத்த உதவும்; கற்றலை வினைத்திறனாக்கும்; கற்பவை மனதில் நன்றாகப் பதியும். அதேநேரம் நீங்கள் சரியான தகவல்களைப் பெறுவதில் கவனமாக இருக்க வேண்டும்.

கற்றலில் மாத்திரமல்லாது உங்கள் அன்றாட வாழ்விலும் பல விடயங்களை நீங்கள் அறிய பல்வேறு வகையான வினாக்களை வினவலாம். குழந்தைகள் பெற்றோரிடம் எப்போதும் வினாக்களை வினவிக் கொண்டிருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அது மனித இயல்பு மட்டுமல்ல, குழந்தைகள்தான் அதிகம் கற்க வேண்டியவர்கள். எனவே, வினாக்களைத் தொடுத்து பல்வேறு விடயங்களை வெட்கமின்றிக் கற்கின்றனர்.

உங்களுக்குள்ளும் நீங்கள் பல வினாக்களைத் தொடுக்கலாம். அப்பிள் ஏன் கீழே விழ வேண்டும்; மேலே செல்லக்கூடாது? என்ற வினா விடை தேடிச் சென்ற பயணம்தான் நியூட்டனுக்கு புவியீர்ப்பு விசையைக் கற்றுக் கொடுத்தது. ■

PUBLI LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை தரும் ஈ

ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

எமது பார்வையில் ஈ மற்றும் நுளம்பு என்பன அற்பப் படைப்புகள் என்றபோதிலும் அவையும் அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகள் என்பதால் அல்லாஹ் அவற்றிலும் பல அத்தாட்சிகளை வைத்துள்ளான். இவை பற்றி அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் ஒரு சில இடங்களில் இடம் பெற்றுள்ளன. ஈயும் நுளம்பும் அதிகமாக மனிதர்களை நெருங்கியே வாழ்கின்றன. பகலில் ஈத் தொல்லையென்றால் இரவில் நுளம்புத் தொல்லை. இரண்டும் மாறி மாறி எம்மைத் தொல்லைப்படுத்திக் கொண்டேதான் இருக்கின்றன. எனவே, இவற்றில் அல்லாஹ் வைத்திருக்கும் ஒரு சில அற்புதங்களைப் பற்றி இத் தொடரில் பார்ப்போம்.

ஈ இல்லாத நாடில்லை என்பார்கள். அந்த அளவு ஈக்கள் மனித வாழ்க்கையுடன் பிணைந்து அனைத்து இடங்களிலும் வாழ்கின்றன. ஈக்களின் தொல்லை எவ்வளவு அதிகமோ அதே போன்று அவற்றின் தொகையும் அதிகமாகவே உள்ளது. இதுவரைக்கும் 2 இலட்சத்து 40 ஆயிரம் வகையான ஈக்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 1 இலட்சத்து 20 ஆயிரம் இனங்கள் பற்றி அறிவியல் ரீதியாக ஐரோப்பிய மொழிகளில் விளக்கி எழுதப்பட்டுள்ளது.

இவற்றில் பெருங்கால் கொசுக்கள் (Gnat), நீர் ஈக்கள் (Midges) என்பவற்றையே நாம் அதிகமாகக் காண்கிறோம். ஈக்கள் நீர் நிலைகளில் அதிகமான முட்டைகளை யிட்டு சந்ததிகளை உற்பத்தி செய்தாலும் அவை ஆகக்கூடியது பத்து நாட்கள்தான் உயிர் வாழ்கின்றன. ஆனால் ஒரு பெண் ஈ இறக்கும் முன் இன்னும் அதிகமான சந்ததிகளை உருவாக்கி விட்டே இறக்கின்றது.

அல்லாஹ் இணை வைப்பாளர்களுக்கு உரைக்கும் வகையில் சிலைகளை ஈயுடன் ஒப்பிடுகையில் அதனை விடவும் அவை எவ்வளவு பலவீனமானவை என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

"மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே, அதனைச் செவி தாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் அழைத்துப் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது. மேலும், அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துச் சென்றாலும் அவர்களால் அதனை அந்த ஈயிடமிருந்து திரும்பப் பறித்துக் கொள்ளவும் முடியாது. தேடுவோனும் தேடப்படுவோனும் பலவீனமானவர்களே!" (22:73)

தும்பியின் முகத்தைப் போன்ற முகத்தோற்றத்தையும் அதில் இரு புறமும் இரு பாதியாக கண்களையும் நீண்ட உறிஞ்சான் ஒன்றையும் ஆறு கால்களையும் இரு புறமும் இரண்டு சிறகுகளையும் இவை கொண்டுள்ளன. கால்களிலும் உடலிலும் ஒட்டும் தன்மை வாய்ந்த ஆயிரக்கணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான சிறு சிறு மயிர்கள் காணப்படுகின்றன.

ஈக்களின் முகத்தில் இரு பாதியாக இரண்டு கண்கள்தான் எமக்குத் தெரிந்தாலும் சிறிது சிறிதாக மொத்தம் 500 இற்கும் அதிகமான கண்களை அல்லாஹ் அவற்றுக்கு வழங்கியுள்ளான். இதனால் அவற்றின் பார்வை மிகக் கூர்மையாக இருக்கும். தும்பிக்கைபோன்று நீண்டிருக்கும் அவற்றின் உறிஞ்சான்களால்தான் அவற்றின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. ஈக்கள் அதிகமாக திரவப் பொருட்களையே உறிஞ்சுகின்றன. இனிப்பு, கசப்பு, உவர்ப்பு என்று வரையறையின்றி கண்டதையெல்லாம் மொய்த்து உறிஞ்சி விடுகின்றன. சிலபோது இரத்தத்தையும் உறிஞ்சிக் கொள்கின்றன. இலகுவாக எதனையும் உறிஞ்சுவதற்கு அல்லாஹ் அவற்றின் உறிஞ்சு குழாயில் ஆறு அறைகளை அமைத்துள்ளான். எனவே, ஒரே தடவையில் ஆறு குழாய்களூடாகவும் மிக விரைவாக உணவுப் பொருள் அவற்றின் வாயைச் சென்றடையும்.

ஒளி ஊடுபுகும் விதத்தில் ஈக்களில் அமைந்திருக்கும் இறகுகள் மிக விரைவாகப் பறப்பதற்கு ஏற்றவகையில் உறுதியாகப் படைக்கப்பட்டுள்ளன. அத்தோடு கண்களுக்குத் தென்படாத அமைப்பில் மிக மெல்லிய இரத்த நரம்புகள் நூற்றுக்கணக்கில் அவற்றில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

ஒளி ஊடு புகும் விதத்தில் ஈக்களில் அமைந்திருக்கும் இறகுகள் மிக விரைவாகப் பறப்பதற்கு ஏற்றவகையில் உறுதியாகப் படைக்கப்பட்டுள்ளன. அத்தோடு கண்களுக்குத் தென்படாத அமைப்பில் மிக மெல்லிய இரத்த நரம்புகள் நூற்றுக்கணக்கில் அவற்றில் ஓடிக் கொண்டிருக்கின்றன. பொலித்தீன் போன்று மிக மெல்லியதாக அவ் இறக்கைகள் இருந்தாலும் பறக்கும்போது அவை பிய்ந்துவிடாத வண்ணம் அல்லாஹ் பாதுகாத்து வைத்துள்ளான்.

ஈக்கள் குப்பை கூழங்களிலும் அழுகிய உணவுப் பொருட்களிலும் நகர்ப் புறங்களில் அழுகிய வாய்க்கால்களிலும் மலசலகூடங்களிலும் அதிகமாகச் சஞ்சரிக்கின்றன. ஓரிடத்தில் ஈயொன்று போய் அமர்ந்தால் அவற்றின் உடலிலும் கால்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான மயிர்களில் ஆயிரக்கணக்கான நுண் கிருமிகள் தொற்றிக் கொள்கின்றன. ஈக்கள் எமது உணவுகளில் வந்து மொய்க்கும்போது அக்கிருமிகள் எமது உணவுகளிலும் தொற்றிக் கொள்கின்றன. இதனால் மனிதன் பல நோய்களுக்கும் ஆளாகின்றான். ஆனாலும் அல்லாஹ் அதே ஈக்களில் நோயெதிர்ப்புச் சக்தியையும் வைத்துள்ளான். இன்று விஞ்ஞானம் கூறும் இத் தகவலை நபியவர்கள் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு கூறிய அற்புதத்தைப் பாருங்கள்.

"உங்கள் குடிபானத்தில் ஈ விழுந்தால், அதை உள்ளே மூழ்கடித்துவிட்டு பின்னர் வெளியில் எறிந்துவிடவும். ஏனெனில், அதன் ஓர் இறக்கையில் நோயும் மற்றையதில் நிவாரணமும் உள்ளது."

(அல்புகாரி, அபூ தாவுத்)

ரஷ்யாவைச் சேர்ந்த பிரபல விலங்கியல் ஆய்வாளர் ஒருவர் கூறுகிறார்:

"ஈக்கள் பொதுவாக அசிங்கமான இடங்களிலும் கழிவுகளிலும் வாசம் செய்வதால் அவை கிருமித் தாக்குதலுக்குள்ளாகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஈ இனமே அழிந்து விடும் சாத்தியம் இருந்தும்கூட அவை எப்படித் தொடர்ந்தும் உயிர் வாழ்கின்றன என்ற கேள்வி என்னுள் எழுந்தது. அதற்கான காரணத்தை அறிய ஆவல் கொண்டேன். எனவே, ஒரு நாள் எத்தனால் (Ethanol) திரவத்தில் கொஞ்சம் ஈக்களைப் பிடித்துப் போட்டு அதில் ஊற வைத்தேன். மறுநாள் அந்தத் திரவத்தைப் பார்த்தபோது அதன் மேல் பகுதியில் ஆடை போன்ற திரவம் படிந்திருந்தது. அதை எடுத்து ஆய்வு செய்தபோது அது முழுக்க முழுக்க நோய் எதிர்ப்புச் சக்தியின் திரட்டு என்பதை அறிந்து கொண்டேன். ஒப்பீட்டளவில் மனித உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவைவிட ஈயின் உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு பன்மடங்கு அதிகமாகவே உள்ளது."

இவ்வளவு அற்புதங்களை அல்லாஹ் ஈக்களில் வைத்திருக்கிறான் என்றால் ஈயை விடவும் பன்மடங்கு பிரம்மாண்டமான இப்பிரபஞ்சத்தில் எத்துணை எத்துணை அற்புதங்களை வைத்திருக்க வேண்டும்! ஆனாலும் இப்பிரபஞ்சம் அல்லாஹ்விடத்தில் ஈயின் ஓர் இறக்கையளவு கூட பெறுமான மற்றது என்று நபியவர்கள் கூறினார்கள். (அல்புகாரி) ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

ஸைமோலஜி - நுரைத்தல் சம்பந்தமான படிப்பு
சீஸ்மோலஜி - எரிமலை, பூகம்பம் பற்றிய படிப்பு
கொஸ்மோலஜி - பிரபஞ்சத் தோற்றத்தைப் பற்றிய படிப்பு
ஒராலஜி - மலைகளைப் பற்றிய படிப்பு
பெடாலஜி - மண் வகைகளைப் பற்றிய படிப்பு

சித்தீக் பாத்திமா பஸீஹா, தரம் - 9
அ/மனாருல் உலூம் மு.ம.வி, கம்பிரிகஸ்வெவ,

பொது அறிவு

- இலங்கையின் புராதன வரலாற்றை கூறும் நூல்- மகாவம்சம்
- செய்திப் பரிவர்த்தனை நிலையம் எங்கு உள்ளது? பாதுக்கை
- இலங்கையின் அயல் நாடு- இந்தியா
- இலங்கையில் உள்ள ஒரு குடா நாடு- யாழ்ப்பாணம்
- இலங்கை வான் படையைக் குறிக்கும் சின்னம்- கழுகு
- பழைய பாராளுமன்றம் அமைந்துள்ள இடம்- காலிமுகத்திடல், கொழும்பு - 03
- புதிய பாராளுமன்றம் அமைந்துள்ள இடம்- ஸ்ரீ ஜயவர்த்தனபுர
- பாக்கு நீரிணையை முதலில் நீந்திக் கடந்தவர்- மு. நவரத்தின சாமி

எம்.கே. சப்னம் சிஹறா
பாத்திமா சஃப்ரா பெ.அ.க,
ஓட்டமாவடி

புதிய பெயர் சூட்டிக்கொண்ட நாடுகளும் நகரங்களும் நாடுகள்

பழைய பெயர்	புதிய பெயர்
கம்பூச்சியா	கம்போடியா
பெர்ஷியா	ஈரான்
கோல்ட் கொஸ்ட்	கானா
பர்மா	மியன்மார்
கொங்கோ	ஸாயிர்
சயாம்	தாய்லாந்து
சிலோன்	இலங்கை
எகிப்து	ஐக்கிய அரபு குடியரசு
மலாயா	மலேசியா
நிப்போன்	ஜப்பான்

பழைய பெயர்	புதிய பெயர்
கல்கத்தா	கொல்கொத்தா
கொன்ஸ்தாந்து நோபிள்	இஸ்தான்புல்
பெடரோகிராட்	லெனின் கிராட்
சலிஸ் பரி	ஹாரே
பம்பாய்	மும்பாய்
மெட்ராஸ்	சென்னை
ரங்கூன்	யான்கோன்
கிறிஸ்டினா	ஒஸ்லோ
புத்தேவியா	ஜகார்த்தா
அங்கோரா	அங்காரா

ஆர்.எம். ரயீஸ்,
தரம் - 11,
பு/ வேப்பமடு அர்ரஹ்மா மு.ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்குர்ஆன் பற்றி...

அல்குர்ஆனின் தாய் என்று அழைக்கப்படும் ஸூரா எது?
ஸூரதுல் பாத்திஹா
ஸூரதுல் பகராவில் எத்தனை ஆயத்துக்கள் உள்ளன? **286**
அல்குர்ஆனில் உள்ள ஹர்பு(எழுத்து)கள் எத்தனை? **322,670**
அல்குர்ஆனில் பிஸ்மி கூறப்படாத ஸூரா எது? **ஸூரதுத் தௌபா**
'யௌமுல் புர்கான்' என குர்ஆன் குறிப்பிடும் நாள் எது? **பத்ர் யுத்த நாள்**
அல்குர்ஆனில் உள்ள அத்தியாயங்கள் எத்தனை? **114**
அல்குர்ஆனில் உள்ள மன்ஸில்கள் எத்தனை? **07**
அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்ட முதல் பெண்மனி யார்?
மர்யம் (அலைஹிஸ்ஸலாம்)
ஸூரா யாஸீன் என அழைக்கப்படுபவர் யார்? **ஹபீபுன் நஜ்ஜார்**
ஆப்ரஹா மன்னன் ஏறி வந்த யானையின் பெயர் என்ன? **மஹ்மூத்**
அல்குர்ஆனில் இறுதி ஸூரா எது? **ஸூரதுன் நாஸ்**
அல்குர்ஆனில் உள்ள ஸஜதாக்கள் எத்தனை? **15**
அல்குர்ஆனில் மிகச் சிறிய ஸூரா எது? **ஸூரதுல் கௌஸர்**
சுவர்க்கத்தில் நோன்பாளிகள் மாத்திரம் நுழையக்கூடிய வாயிலின் பெயர் என்ன? **ரய்யான்**

என். ஆசிக், தரம் - 10, இறக்காமம்

பிரபலமான இடங்கள்

பித்தளைக் கைத்தொழில் - பிலிமத்தலாவ, உடுநுவர
பாய் பின்னல் - தும்புர
முகமூடிக் கைத்தொழில் - அம்பலாங்கொடை
மட்பாண்ட உற்பத்தி - களனி
குகை ஓவியங்கள் - திம்புலாகல
உலோக வேலைகள் - கடலாதெனிய
யானைத் தந்தம் - மாவனல்லை
சிறந்த சந்திர வட்டக்கல் காணப்படும் இடம் - அநுராதபுர ராணி மாளிகை
உயர் கலையம்சம் பொருந்திய 'வாகல்கட' அமைந்துள்ள இடம் - மிஹிந்தல கந்த சைத்தியம்
முழு வடிவ தாமரை அலங்காரத்தைக் கொண்ட சந்திர வட்டக்கல் உள்ள இடம் - கம்பளைக்கால (லங்கா திலகையில்)

உலகில் நீளமான தொங்கு பாலங்கள்

மிஸினா ஸ்ட்ரெய்ட் - இத்தாலி
அகாஷி காய்கோ - ஜப்பான்
கிரேட் பெல்ட் - டென்மார்க்
ஹம்பர் - பிரித்தானியா
வெரஸானோ நெரோஸ் - அமெரிக்கா
மெகினெக் - அமெரிக்கா
கோல்டன் கேட் - அமெரிக்கா
பொஸ்போரஸ் - துருக்கி

உலகில் உயரமான மலைகள்

எவரெஸ்ட் - நேபாளம்
கோட்வின் - இந்தியா
கங்சன்ஜங்கா - நேபாளம்
லட்சே - நேபாளம்- திபெத்
மகாலு - நேபாளம்- திபெத்

அன்ஸப், கந்தளாய்

அஸ்மா நிஸாம், தரம் - 8
வெலம்பொட மு.ம.வி, வெலம்பொட

PUBLIC LIBRARY JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச குறியீடுகள்

குறியீடுகள்	கருத்து
வெண்புறா	அமைதி, சமாதானம்
மஞ்சள் கொடி	தொற்று நோய்
சிவப்புச் சக்கரம்	வளர்ச்சி
செஞ்சிலுவை	மருத்துவ உதவி
தீப்பந்தம்	ஒலிம்பிக்
கறுப்புக் கொடி	எதிர்ப்பு, துக்கம், மரணம்
சிவப்பு விளக்கு	ஆபத்து, நிறுத்து
சிவப்பு முக்கோணம்	குடும்பக் கட்டுப்பாடு

ஏ.டப்ளியூ.எம். இம்ஷாக், தரம் – 5
நாச்சியாதீவு மு.ம.வி., அநுராதபுரம்

உலக தினங்கள்

பெண்கள் தினம்	– மார்ச் 08
சுகாதார தினம்	– ஏப்ரல் 07
விண்வெளி தினம்	– ஏப்ரல் 12
புவி தினம்	– ஏப்ரல் 22
தொழிலாளர் தினம்	– மே 01
சூழல் பாதுகாப்பு தினம்	– ஜூன் 05
போதைப்பொருள் தடுப்பு தினம்	– ஜூன் 20
வறுமை ஒழிப்பு தினம்	– ஜூலை 17
அகதிகள் தினம்	– ஜூலை 28
எழுத்தறிவு தினம்	– செப்டெம்பர் 08
சுற்றுலா தினம்	– செப்டெம்பர் 06
மது விலக்கு தினம்	– ஒக்டோபர் 08
ஆசிரியர் தினம்	– ஒக்டேபார் 06
தபால் தினம்	– ஒக்டோபர் 09
ஐ.நா. தினம்	– ஒக்டோபர் 24
சமாதான தினம்	– நவம்பர் 10
மனித உரிமை தினம்	– டிசம்பர் 10

மார்ழியா பஸ்னி
ஓட்டமாவடி

இதயத்துக்கு மருந்து எது?

ஒரு நாள்

ஹஸனுல் பஸரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தமது தோழர்களோடு பஸரா நகரின் கடைத் தெரு வழியாக உலாச் சென்று கொண்டிருக்கையில் ஒரு வைத்தியர் நாற்காலியில் அமர்ந்திருப்பதையும் அவரைச் சுற்றி ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் நீர் நிரப்பப்பட்ட போத்தல்களை வைத்துக் கொண்டு மருந்து பெறுவதற்காக அமர்ந்திருப்பதையும் கண்டார்கள்.

அப்போது ஹஸனுல் பஸரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களோடு வந்த தோழர்களில் ஒருவர் அந்த வைத்தியரை அணுகி, "பாவங்களை அகற்றி இருதய சக்தியை வழங்கும் ஏதாவது மருந்து உண்டா?" என வினவினார்.

அதற்கு அந்த வைத்தியர், "ஆம், என்னிடம் மருந்து உண்டு. நான் தரும் பத்துப் பொருட்களைக் கொண்டு அதனைத் தயாரித்துக் கொள்ளும்" என்று கூறினார்.

"பணிவெனும் மரச் சாற்றுடன் ஏழ்மை எனும் சாற்றையும் எடுத்துக் கொள். அதனுள் தௌபா என்ற மூலிகையை இடு. போதும் என்ற கருவியால் அதை அரை. பக்தி என்ற நீரையும் சேர்த்து ஊற்று. அன்பு எனும் நெருப்பில் அதை சூடாக்கி, நன்றி எனும் குவளையில் அதை இடு. ஆதரவு என்ற விசிறியால் அதை ஆற்று. பின்பு புகழ் என்ற கரண்டியால் அதை தினமும் பருகு. நீ இவ்வாறு செய்தால் உனது பாவங்கள் ஒழிந்து இதயம் சுத்தியடைவதோடு, இம்மை மறுமை இரண்டிலும் உனது எல்லா நோய்களும் தீரும்" என்றார்.

எம்.ஆர்.எப். றிஸ்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொள்வோம்

கரப்பான் பூச்சியின் இரத்தத்தின் நிறம் யாது?	வெள்ளை
உலகிலேயே அதிக மஸ்ஜித்கள் உள்ள நகரம்?	இஸ்தான்புல் (துருக்கி)
மிக இளம் வயதில் நோபிள் பரிசு பெற்றவர்?	வில்லியம் லோரன்ஸ் பிரேக்
உலகில் மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்ட நாடு எது?	சீனா
இந்தியாவுக்கு விஜயம் செய்த முதல் ஜனாதிபதி யார்?	ஐசக் ஹோவர்

ஆர். எம்.ஆர். றக்கீப், தரம் - 11, தி/அல்பத்தா மு.ம.வி., நிலாவெளி



பிராணிகளின் தகவல்கள்

- சமூக வாழ்க்கை வாழும் பூச்சியினங்கள்: தேனீ, கறையான், எறும்பு
- தம்மில் விஷத்தைக் கொண்டுள்ள பிராணிகள்: பாம்பு, தேள், பூரான், குளவி, தேனீ
- கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள்: பற்றீரியா, வைரஸ், பங்கசு
- மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணிகள்: வண்ணத்துப் பூச்சி, தேனீ, வண்டு, தேன் சிட்டு, குளவி
- இரத்தத்தைக் குடித்து வாழும் ஒட்டுண்ணிகள்: நுளம்பு, மூட்டை, பேன், அட்டை, உண்ணி

சாபிரா சுஹைப், தரம் 6
ஸாஹிரா தே.பா, மாவனல்லை

உங்கள் சிந்தனைக்கு

நைலோன் துணியில் நாணய நோட்டுக்களை அச்சடிக்கும் நாடு எது? **மேற்கு ஜெர்மனி**

உலகில் மிக அதிகமாக விற்பனையான புத்தகம் எது? **ஆப்ரகாம் லிங்கன் வாழ்க்கை வரலாறு**

மிக அதிக கல்வெட்டுக்களைப் பாதுகாத்து வரும் இந்திய நகரம்? **மைசூர்**

உலகின் மிகப் பெரிய புத்தகத்தை தயாரித்தவர் யார்? **சுவிட்சர்லாந்தைச்** சேர்ந்த பீட்டர் ட்ரெண்டில்

இந்தியாவின் சட்டம் பயின்ற முதல் பெண்மணி- **முத்துலெட்சுமி அம்மையார்**

பூஞ்சை, காளான் நோய்களைக் குறித்து அறிய உதவும் அறிவியல் துறை- **மைக்காலஜி**

றுக்ஸானா சுஹைப்
தரம்: 10
அ/மனாருல் உலூம் மு.ம.வி, கம்பிரிகஸ்வெவ

முதல் விண்வெளி வீரர்...

- விண்வெளிக்குச் சென்ற முதல் விண்வெளி வீரர் "யூரி ககாரின்" ஆவார்.
- இவர் 1934 மார்ச் மாதம் 09ம் திகதி பிறந்தார்.
- இவரின் தந்தை மரவேலை செய்பவர்.
- 1961 ஏப்ரல் மாதம் வொஸ்டொக் - 1 என்ற விண்கலத்தில் விண்வெளிக்கு பயணம் செய்தார்.
- 1968 மார்ச் மாதம் 27ம் திகதி இவர் உலகை விட்டு பிரிந்தார்.
- ஏழை குடும்பத்தில் பிறந்த இவர் பெரும் சாதனை படைத்தார்.

ஷப்னா ஹுஸைன் - தரம் 09
வெலம்பொடை மு.ம.வி., வெலம்பொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

كَانَ وَأَخَوَاتُهَا — كَانَ வும் அது சார்ந்த வினைச் சொற்களும்

சென்ற இதழ் தொடர்...

خَبَرٌ இன் نَصْبٌ உடைய நிலை மறைந்து வரக்கூடிய வசன அமைப்புகள் இரண்டு.

1. خَبَرٌ ஆனது مُضَارِعٌ ஆன வினைச் சொற்களாக வரக்கூடிய வசனங்கள்.
2. خَبَرٌ ஆனது பெயர்ச் சொல் தவிர்ந்த ஏனைய வடிவங்களில் முழுமை பெறக்கூடிய வசனங்கள்.

عُمَرُ يَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ كُلَّ يَوْمٍ
உமர் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குப் போகிறான்.

كَانَ عُمَرُ يَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ كُلَّ يَوْمٍ
உமர் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தான்.

أَحْمَدُ يَقْرَأُ الْقُرْآنَ بَعْدَ كُلِّ صَلَاةِ الْمَغْرِبِ
அஹ்மத் ஒவ்வொரு நாளும் மஃரிப் தொழுகையின் பின்னர் அல்குர்ஆன் ஓதுகிறான்.

كَانَ أَحْمَدُ يَقْرَأُ الْقُرْآنَ بَعْدَ كُلِّ صَلَاةِ الْمَغْرِبِ
அஹ்மத் ஒவ்வொரு நாளும் மஃரிப் தொழுகைக்குப் பின்னரும் அல்குர்ஆனை ஓதிக்கொண்டிருந்தான்.

فَاطِمَةُ تَطْبَخُ ← كَانَتْ فَاطِمَةُ تَطْبَخُ
பாத்திமா சமைத்துக் கொண்டிருந்தாள்.

خَبَرٌ இன் نَصْبٌ உடைய நிலை மறைத்து வரக்கூடிய வசனங்களைத் தெரிந்து கொள்வோம்.

1) اَلْكِتَابُ عَلَى الْمَكْتَبِ
புத்தகம் மேசையின் மீது இருக்கின்றது.

كَانَ الْكِتَابُ عَلَى الْمَكْتَبِ
புத்தகம் மேசையின் மீது இருந்தது.

2) اَلْوِسَادَةُ عَلَى السَّرِيْرِ
தலையணை கட்டிலின் மீது இருக்கின்றது.

كَانَتِ الْوِسَادَةُ عَلَى السَّرِيْرِ
தலையணை கட்டிலின் மீது இருந்தது.

كَانَ வை நிகழ்காலத்துடனோ إِسْمُ الفَاعِلِ உடனோ சேர்த்து பயன்படுத்தும்போது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்தது என்ற கருத்தைக் கொடுக்கும்.

كَانَ زَيْدٌ يَحْفَظُ الْقُرْآنَ فِيْ الصِّغَرِ
ஸைத் சிறுவயதில் அல்குர்ஆனை மனனமிட்டு வந்தான்.

كَانَ خَالِدٌ يَلْعَبُ كُرَةَ الْقَدَمِ مُنْذُ صِغَرِهِ
காலித் சிறுவயதிலிருந்து கால்பந்து விளையாடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

صَارَ ►	இந்த வினைச் சொல் மாற்றத்தைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும்	

صَارَ الطَّالِبُ مُدَرِّساً — மாணவன் ஆசிரியரானான்.

صَارَتِ الْمُدَرِّسَةُ مُدِيْرَةً — அசிரியை அதிபரானாள்.

بَاتَ ►

- بَاتَ என்பது இரவு நேரங்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்ததைக் காட்டும். أَصْبَحَ — أَمْسَى என்பன முறையே காலை, மாலை நேரங்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்ததைக் காட்டும்.
- بَاتَ، أَصْبَحَ، أَمْسَى ஆகிய மூன்று வகைச் சொற்களும் كَانَ، صَارَ ஆகிய இரு வகை சொற்களினது கருத்தையும் கொடுக்கக்கூடியவையாகும்.

أَصْبَحْتُ مُسَافِراً — நான் காலையில் பிரயாணி ஆகினேன்.

أَمْسَيْتَ مُسْلِماً — நான் மாலையில் முஸ்லிமானேன்.

بَاتَ الرَّجُلُ خَائِفاً — மனிதன் பயந்தவனாக இரவில் இருந்தான்.

ظَلَّ ►

- இச்சொல் தொடர்ந்து ஒரு செயலில் இருத்தல் அல்லது ஈடுபடல் என்ற கருத்தைத் தரும்.

ظَلَّ الرَّجُلُ فَلَّاحاً — மனிதன் விவசாயியாகத் தொடர்ந்திருந்தான்.

ظَلَّ الطَّالِبُ يَكْتُبُ — மாணவன் தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருந்தான்.

لَيْسَ ► **இல்லை**

لَيْسَ نَبِيْلٌ تَاجِراً — நபீல் வியாபாரியாக இல்லை.

لَيْسَ الطَّالِبُ يَقْرَأُ — மாணவன் வாசிக்கவில்லை.

- لَيْسَ தவிர்ந்த كَانَ وَأَخَوَاتُهَا இல் வரும் அனைத்து வினைச் சொற்களையும் நிகழ்காலம், ஏவல், வினை, மற்றும் அனைத்து நிலைகளிலும் பாவிக்கலாம்.

صَارَ	يَصِيْرُ
كَانَ	يَكُوْنُ
أَصْبَحَ	يُصْبِحُ
بَاتَ	يَبِيْتُ
ظَلَّ	يَظِلُّ

لَيْسَ வை நிகழ்காலமாக மாற்ற முடியாது.

(படர்க்கை ஆண்)	لَيْسَ	لَيْسَا	لَيْسُوْا
(படர்க்கை பெண்)	لَيْسَتْ	لَيْسَتَا	لَسْنَ
(படர்க்கை ஆண்)	لَسْتَ	لَسْتُمَا	لَسْتُمْ
(படர்க்கை பெண்)	لَسْتِ	لَسْتُمَا	لَسْتُنَّ
தன்மை	لَسْتُ	لَسْنَا	

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ENGLISH WITH

Sister Rumman

I learn everyday

Assalamu alaikum dear friends,

After days of fun, we are back to begin the run. What do you think about the people who never get holidays in life? Do you know about the Palestinian people who fight in the cause of Allah...

I request you to get to know about them, and try maximum to support them. Let's hold the hands and support our brothers and sisters.

I thought of telling this as I've seen many of our Muslims purchase products that can AFFECT OUR PALASTENIAN brothers. Coca Cola, Pepsi and etc. Of course there are instances when we cannot avoid some things. But these soft drinks ! They are totally unnecessary. We should not spend even a single penny on them.

Coming back to English, shall we look at some riddles this time?

our language skills get polished up, as we try to answer riddles. For example, look at this.





Which is the coolest letter in the English alphabet?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B, because it's between AC.

Got it guys?

Now , it's time for your brain. Find out the answers.

- **Which word can have 1000 letters in it?**
- **Which is the letter that can fly?**
- **Which letter can get longer and longer?**
- **Which letter has lots of water?**
- **Which is the letter that we can drink?**
- **Which letter makes you show your teeth?**
- **Which bird cannot lay eggs?**
- **What is the meal that you cannot have in the morning?**
- **What do tigers have that no other animals have?**
- **What begins with T ends with T and has T in it?**
- **Which is the longest word in English?**



Have fun with riddles!

Here is the palm of the little girl Nasrin. Fill in it with all the words you do with your palm. Words like EAT, PULL......etc.

Answers for the riddles

Post box, B,Q,C,T,E,A male bird!, Dinner, Tiger cubs, Tea pot, Smiles-because there's a 'mile' between the 1st and last S.



Your corner
Entries by mail

Many wars in history
Have been fought
For this Five Letter Word
Which rules the whole world

Often it deceives
Who love to live, live to love
Some just to grieve
And let the rest's souls to leave

Neither it sleeps nor let others, they say
Either to a beggar even to a bishop
This makes life much better
Yet makes life more bitter

Even evil spells to live in reverse
But this one much more adverse
Kills the one who loves it
Even the one who leaves it

You have no choice
Is there anyone more wise?
It won't come to you when you call it
Won't go from you when You chase it

To find out what it is,
It's up to you to seek
Find your way back to the peak
I have HID the FIVE
In the FIRST of the FIRST FIVE!

Amry Asif

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ALLAH'S THOUGHT AT ALL TIMES

- When starting to do something : say BIS-MILLAH.
- When intending to do something : say INSHA-ALLAH.
- When something is being praised : say SUBHAAN-ALLAH.
- When in pain and distress : say YA-ALLAH.
- When expressing appreciation : say MASHA-ALLAH.
- When thanking someone : say JAZAK-ALLAH.
- When awakening from sleep : say LA-ILAHA-ILLALLAH.
- When taking oath : say WALLAH BILLAH.
- When sneezing : say ALLHAMDO-LILLAH.
- When someone else sneezes : say YAR-HAMOK-ALLAH.
- When repenting of a sin : say ASTAGH-FERULAH.
- When giving to charity : say FI-SABI-LILLAH.



NASRAN NOWFER
Grade - 8
Al-Humaizara, National School

Entry by post

Advantages and disadvantages of television

Television is a very effective and essential tool that students can use , as there are many educational programmes on TV. There are lessons for students and examination candidates, panel discussions on various subjects and quiz programmes. We can get a lot of information if we watch news broadcast and weather forecast on TV. When we watch the Discovery channel, we can learn about space, sea bed and cultures e.t.c. Advertisements provide information about products and services. People who cannot read newspapers can watch TV and get information.

However there are many disadvantages of TV. Although there are educational programmes on TV, they may not help us to develop our mind as we watch them passively. In fact, we cannot question or argue and clear doubts too. Also, social life of people has changed because of TV as they don't have time for friends and relatives. Human relationship has declined very badly nowadays. Children are addicted to TV and neglect studies. Some films ,drams or cartoons teach bad things to people. Further more TV takes us to an imaginary world, which is different from the real world.

Juwairiya Mubarak
St.Andrew's BMV
Nawalapitiya

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

i. திசா வாவி, குறுளு வாவி, மகாவிலச்சிய ஆகிய குளங்களை அமைத்த மன்னர்களை அதே ஒழுங்கில் தருக.

ii. அனுராதபுர காலத்தில் ஏன் நீர்ப்பாசனம் அவசியமாக இருந்தது என்பதற்கான 4 காரணங்களைத் தருக.

iii. எமது முன்னோர்கள் நீர்ப்பாசனத் துறையில் சிறந்த தொழிநுட்பத்தைப் பயன்படுத்தினார்கள் என்பதனை உதாரணங்கள் மூலம் விளக்குக.

iv. நீர்வள நாகரிகத்தின் பொருளாதார அமைப்பை விளக்குக.

விடைகள்

i. தேவநம்பிய தீசன், மகாசேனன், வசபன்

ii. அ. மக்கள் குடியேறிய பிரதேசத்தில் சில மாதங்கள் மாத்திரமே மழை பெய்தது.

ஆ. அவ்வாறு பெய்த மழையும் போதுமானதாக அமையவில்லை.

இ. மலையகத்தில் கிடைத்த மேலதிக நீரை சேமித்து வைப்பதற்கு குளம் தேவைப்பட்டது.

ஈ. அதிகரித்த சனத்தொகைக்கு அதிக உணவு தேவைப்பட்டது.

iii. **அ. நிலத்தின் சாய்வைப் பயன்படுத்தியமை**

நிலத்தின் மென்சாய்வைப் பயன்படுத்தி நீரைக் கொண்டு சென்றதிலிருந்து எமது முன்னோர்களின் தொழில்நுட்ப அறிவை நாம் அறிந்து கொள்ளலாம். மென்சாய்வைப் பயன்படுத்தி கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு ஜயகங்கைக் கால்வாய் மூலம் நீரைக் கொண்டு சென்றனர். இக் கால்வாய் ஒரு கிலோ மீற்றருக்கு 95 மில்லி மீற்றர் சாய்வைக் கொண்டிருந்தது. இக் கால்வாயின் சாய்வு தற்கால பொறியியலாளருக்கும் வியப்பை ஏற்படுத்தியமையால் இது அதிசயமான கால்வாய் என்று அழைக்கப்படுகிறது.

ஆ. சுரங்க நீர்ப்பாசனம்

எமது முன்னோர்கள் சுரங்க நீர்ப்பாசன தொழிநுட்பத்திலும் சிறந்து விளங்கினார்கள். நிலத்துக்குக் கீழே குழாய்கள் மூலம் நீரைக் கொண்டு செல்லும் நுட்பத்தை அவர்கள் அறிந்திருந்தனர். அனுராதபுரத்தில் உள்ள திசாவாவியிலிருந்து ரன்மசு பூங்காவுக்கும் குட்டம் பொய்கைக்கும் இவ்வாறு நீர் கொண்டு செல்லப்பட்டது. எம் முன்னோர்கள் நீர் வளத்தை வீண் விரயமாக்காது அதனை சிறப்பாகப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு சுரங்க நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் சிறந்த சான்றாக விளங்குகிறது.

குளத்தில் மேலதிக நீர் நிறையும்போது அதனை வெளியேற்ற கருங்கல்லால் அமைந்த வான் கதவு அமைக்கப்பட்டதையும் அலைதாங்கி, கலிங்கற் தொட்டி முதலியன அமைக்கப்பட்டதையும் எமது முன்னோர்களின் தொழில்நுட்பத்திற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

iv. விவசாயம்

நீர் வள நாகரிக காலத்தில் விவசாயம் முக்கியம் பெற்றிருந்தது. விவசாயத்தில் நெற்செய்கை பிரதான இடத்தை வகித்தது. நெற்செய்கை வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகளில் மேற்கொள்ளப்பட்டது. வருடம் முழுவதும் குளம் நீர்ப்பாசனம் பெறக்கூடிய பகுதிகளில் வருடத்திற்கு 3 தடவைகள் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. தோணிகல கல்வெட்டில், பிட்டட ஹஸ (பெரும் போகம்) மத ஹஸ (சிறு போகம்) அகல ஹஸ (இடைப் போகம்) எனும் 3 போகங்களிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

நெல் தவிர பயறு, எள், மா, தென்னை, கரும்பு முதலிய பயிர்களும் பயிரிடப்பட்டன. சேனைச் செய்கையில் உளுந்து, பயறு முதலிய தானியங்களும் கத்தரிக்காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய் முதலிய காய்கறிகளும் பயிரிடப்பபட்டன.

கைத்தொழில்

இக்காலத்தில் விவசாயத்திற்கு அவசியமான கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன. மண்வெட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பை, கத்தி, அரிவாள் முதலிய பல உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்று 'அட்டுவா' என்ற கதையிலும் 'சத்தர் மரத்னாவலிய' என்ற நூலிலும் கூறப்பட்டுள்ளது. யுத்தத்திற்கு தேவையான கருவிகளும் சிலைகளும் விளக்குகளும் உலோகக் கைத்தொழில் மூலம் கிடைத்தன. புடவைத் தொழில், மட்பாண்டத் தொழில், கருப்பட்டி தயாரித்தல், செங்கல் தயாரித்தல், ஆபரணக் கைத்தொழில் முதலிய பல கைத்தொழில்களும் அக்காலத்தில் வளர்ச்சியடைந்திருந்தன.

11ம் தரம்

1. A. பிரான்சியர், B. ஜேர்மனியர், C. இத்தாலியர், D. போர்த்துக்கேயர் E. ஆங்கிலேயர்

மேலே குறிப்பிட்ட நாடுகளுள் இந்தியாவை ஆட்சி செய்த இனத்தவர்களுக்குரிய எழுத்துக்களைத் தருக.

ii. சிப்பாய் கலகத்திற்கான காரணங்கள் 4 தருக.

iii. இந்தியா விடுதலை பெறுவதற்கு மகாத்மா காந்தி ஆற்றிய பங்களிப்பை 2 உதாரணங்களுடன் விளக்குக.

iv. மேஜிஜி சீர்திருத்தம் ஜப்பானின் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கியது. இதனை 3 உதாரணங்கள் மூலம் விளக்குக.

விடைகள்

i. A, D, E

ii. அ. பன்றிக் கொழுப்பும் பசுக்கொழுப்பும் பூசப்பட்ட குண்டுகளை சிப்பாய்களுக்கு வழங்கியமை.

ஆ. கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கு ஆட்சியாளர் அதிக உதவிகளை வழங்கியமை.

இ. புகையிரத சேவையும் தந்திச் சேவையும் கலகக்காரர்கள் இலகுவாக தொடர்பு கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளமை.

ஈ. இந்தியத் தலைவர்களை ஆங்கிலேயர் மதிக்காமை.

iii. சத்தியாக்கிரகம்

ஆங்கிலேயருக்கு எதிராக மகாத்மா காந்தி பல சத்தியாக்கிரகங்களை மேற்கொண்டார். அவை மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கும் தேசிய உணர்வு அதிகரிப்பதற்கும் வழிவகுத்தன. வங்காளத்தில் சம்பா பிரதேசத்தில் இண்டிகோ பயிரிடுவோரின் பிரச்சினையை சத்தியாக்கிரகம் மூலம் மகாத்மா காந்தி தீர்த்தார். பிரித்தானிய அரசு உப்புக்கு வரி விதித்ததை எதிர்த்து உப்புச் சத்தியாக்கிரகத்தை நடத்தினார்.

61 வயதான காந்தி குஜராதில் சவர்மதி ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு 24 நாட்கள் 241 மைல் நடந்து சென்று ஆசிரமத்துக்கு அண்மையிலுள்ள தண்டி என்ற இடத்தை சென்றடைந்தார். 6.4.1930 இல் சட்டத்தை மீறி உப்பளத்தில் வைக்கப்பட்டிருந்த உப்பை அவர் அள்ளினார். இவ்வாறு மகாத்மா காந்தி செய்த பல போராட்டங்களின் விளைவாகவே இந்தியா 1947.08.15 ஆம் திகதி சுதந்திரக் கனியை சுவைத்தது.

ஒத்துழையாமை இயக்கம்

பாலகங்காதர திலகர் மரணமடைந்ததைத் தொடர்ந்து, மகாத்மா காந்தியின் தலைமைத்துவம் இந்திய காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்தது. 1920 செப்டெம்பர் மாதம் கொல்கொத்தாவில் காங்கிரஸ் கட்சி பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திலே ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தை நடத்துவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 1855 வாக்குகளும் எதிராக 873 வாக்குகளும் கிடைத்தன. பிரித்தானியாவின் பொருட்களையும் அவர்கள் வழங்கிய பதவிகளையும் பகிஷ்கரிப்பது என்பது இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இதன்படி, நேரு, ராஜாஜி முதலியோர் தமது வக்கீல் தொழிலை ராஜினாமா செய்தனர். சுபாஸ் சந்திரபோஸ் தனது ஐ.சி.எஸ். பட்டத்தை ராஜினாமா செய்தார். ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து வெளியேற மகாத்மா காந்தி முன்னெடுத்த ஒத்துழையாமை இயக்கம் முக்கிய பங்கு வகித்தது.

iv. புதிய யாப்பு: மேஜிஜி சீர்திருத்தம் புதிய யாப்பை 1889இல் அறிமுகப்படுத்தியது. அந்த யாப்பில் பல முன்னேற்றமான அம்சங்கள் இருந்தன. இதனால் விரைவாக முன்னேற ஜப்பானுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. பிரதிநிதிகள் சபையையும் பிரபுக்கள் சபையையும் உடைய 'டயட்' என்னும் பாராளுமன்றத்தை புதிய யாப்பு ஏற்படுத்தியது. இந்த யாப்பு நாலரை இலட்சம் பேருக்கு வாக்குரிமையை வழங்கியது. வாக்குரிமை அறிமுகப்படுத்தப்படாத பல கட்சிகள் தோன்றின. ஜியூடோ என்ற கட்சியை இடகாகி என்பவர் ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து முற்போக்கு கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வளர்ச்சியடைந்தது

மேஜிஜி சீர்திருத்தம் கல்வி வளர்ச்சிக்கும் அத்திபாரமிட்டது. இதன் பயனாக ஜப்பான் கல்வியில் முன்னேறிய ஒரு நாடாக மாறியது. டச்சு விஞ்ஞான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப் பட்டதனால் ரூசோ, ஜெரமி, பெந்தம் முதலிய மேலை நாட்டு அறிஞர்களின் நூல்களைப் படிக் கும் வாய்ப்பு ஜப்பானியருக்குக் கிடைத்தது. தொடர்ந்து கல்வி கற்பது கட்டாயமாக்கப்பட்டது. தோஷிஹா பல்கலைக்கழகமும் பேரரசுப் பல்க லைக்கழகமும் உருவாகியதால் ஜப்பான் கல்வியில் முன்னேற்றமடைந்த ஒரு நாடாக மாறியது.

கைத்தொழில் வளர்ச்சி

இன்று உலகில் ஜப்பான் முக்கிய கைத்தொழில் நாடாக மாறியமைக்கு மேஜிஜி சீர்திருத்தமே முக் கிய காரணியாகும். மேலைத்தேசங்களில் இருந்து பெற்றுக் கொண்ட தொழில்நுட்பமும் தொலைத் தொடர்பு வலையமைப்பும் சிறந்த போக்குவரத் துப் பாதைகளும் ஜப்பானில் கைத்தொழில் வளர காரணங்களாக அமைந்தன. மேஜிஜி சீர்திருத்தத் தின் விளைவாக மிட்சுய், மிட்சுபிசி முதலிய கைத்தொழில் நிறுவனங்கள் ஜப்பானில் தோன் றின. 1930இல் ஜப்பானிய தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆறு மில்லியனாக இருந்தது. சர்வதேச வர்த்தகத் தில் ஈடுபடக்கூடிய பெரிய கப்பல்களைக் கட்டக் கூடிய திறனை ஜப்பான் பெற்றுக் கொண்டது.

வகுப்பறையில் நாமும் இப்படிக் கற்றால்

ஆசிரியர்: அன்புக் குழந்தைகளே! அஸ்ஸலாமு அலைக்கும். இன்றைக்கு ஒரு கருவி யைப் பற்றி பார்ப்போமா...! அது இரு பாகங்களால் ஆன ஒரு கருவி.

சமீர்: பேனாவும் மூடியும்.

ஆசிரியர்: இல்லை! 25 மி.மீ. நீளம் கொண்டது. 28 கிராம் எடை கொண்டது.

ஆசிக்: சின்ன செடி சார்!

ஆசிரியர்: இல்லை! 2 மில்லியனுக்கும் அதிக மான வேலைப் பகுதிகளைக் கொண்டி ருக்கிறது. மணிக்கு 36,000 bits தகவல் களை அனுப்பவல்லது.

தாரிக்: கம்யூட்டர்...!

ஆசிரியர்: இல்லை! 50 பலதரப்பட்ட விஷயங் களின் மீது ஒரே நொடியில் கவனம் செலுத்தவல்லது. 10 மில்லியன் நிறங்க ளைப் பிரித்துணரவல்லது. 14 மைல்க ளுக்கு அப்பால் உள்ள மெழுகுவர்த் தியின் வெளிச்சத்தைக் கூட கண்டறிய வல்லது.

ஃபாசில்: HD Camera (Sony, Canon, Kodak)

ஆசிரியர்: இல்லை! இல்லை! தேய்மானமே ஆகாத பொருள். இதன் திரைகள் 5 மாதத் திற்கு ஒருமுறை மாறும்.

மாணவர்கள்: தெரியல்ல சார்! நீங்களே சொல்லுங்க...!

ஆசிரியர்: நம் கண்கள்தான் அந்தக் கருவி. இவ்வளவு நேரம் நான் சொன்னது அதைப் பற்றித்தான். மாஷா அல்லாஹ்! இறை வன் எவ்வளவு அழகாக நுட்பமா கப்ப டைத்துள்ளான்.

ரிபாயுதீன்

நன்றி: இளம்பிறை

அகரம் விலை அதிகரிப்பு

மதிப்புக்குரிய வாசகர்களே!

உங்கள் அபிமான சஞ்சிகை அகரத்தின் விலை அடுத்த இதழிலிருந்து ரூபா. 40/= ஆகவும் உள்நாட்டுக்கான ஒரு வருட சந்தா ரூபா 700/= ஆகவும் அதிகரிக்கிறது.

அச்சுத்தாள், மின் கட்டணம், ஊழியர் சம்பளம், போக்குவரத்துச் செலவு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பாரிய விலை அதிகரிப்புக் காரணமாக அகரம் பிரதியொன்றின் விலையை இவ்வாறு அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எனவே, வாசகர்கள் மற்றும் விற்பனை முக வர்களாகிய நீங்கள் இயல்பாக எழக்கூடிய இச்சூழ்நிலையைப் புரிந்து கொண்டு உங்கள் அபிமான சிறுவர் சஞ்சிகையின் விலை உயர்வை ஏற்றுக் கொண்டு தொடர்ந்தும் எமக்கு ஆதரவு அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

-முகாமைத்துவம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐடியா கூட்டணி

■ ஜே.எம். அஸீம்

எப்போது வேண்டுமானாலும் எம்மால் விரித்துப் பறக்க முடியுமான சிறகுதான் கற்பனைச் சிறகு. கற்பனை உலகில் நாம்தான் ராஜா. அந்த உலகில் எம்மை வெல்ல யாருமில்லை. கற்பனை செய்வது எம் அனைவருக்கும் மிகவும் பிடித்தமான ஒன்றே. கற்பனை செய்யாமலிருப்பதுதான் கஷ்டமான விடயம். பெரும்பாலும் எப்போதுமே எம் கற்பனைச் சிறகுகள் விரிந்தபடிதான் இருக்கும்.

அனைவரும் கற்பனை உலகில் கொடி கட்டிப் பறந்த போதிலும் ஒரு சிலர் மாத்திரமே கற்பனை மூலம் நிஜ உலகிலும் கொடி கட்டிப் பறக்கின்றனர். நாமும் அவர்களைப் போல எம் கற்பனை வளத்தால் நிஜ உலகில் கொடி கட்டிப் பறக்க என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய உங்களுக்கு ஆவல் பிறந்திருக்கும்.

நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. கற்பனை செய்ய வேண்டியதுதான். ஆனால் எப்படி?

தோமஸ் அல்வா எடிசன் மின்விளக்குகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பலமுறை தோல்வி கண்டார் என்பதை நாம் பலமுறை கேள்விப் பட்டிருப்போம். எத்தனை முறை என்பதில் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. அவருடன் சம காலத்தில் வாழ்ந்த அவரது தொழில்முறை நண்பரான நெப்போலியன் ஹில் கூறுகிறார்;

“எடிசன் புதுவகை மின்குமிழ் ஒன்றைக் கண்டு பிடிக்க 10,000 புதிய ஐடியாக்களை (கற்பனைகளை) போட்டு முயன்று விட்டார். பின்னர் முயன்ற போதுதான் மின்விளக்கிற்கான புதிய ஐடியா பளிச்சிட்டது. அதன்பின் மின் குமிழ் எரிந்தது.”

நாம் நினைக்கக் கூடாது எமது முதல் ஐடியா உலகாளும் என்று. எம்மையறியாமல் எமக்குத் தோன்றும் ஐடியாக்கள் ஏராளம். இந்த ஒரு ஐடியாதான் உங்களை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்தும்; உங்களை தனித்தும் உள்ளவர்களாக்கும்.

ஆப்ரஹாம் லிங்கன், தனது ஆக்கபூர்வமான கற்பனா சக்தியால் உந்தப்பட்டு சிந்திக்க முற்பட்டபோது அவருக்குத் தோன்றிய ஐடியாக்கள் அவரை ஜனாதிபதியாக்கியது மட்டுமல்ல, அடிமை விடுதலைக்காகவும் போராடச் செய்தது.

ஒருவர் எந்தளவுக்கு முறையாக உடற்பயிற்சி செய்கிறாரோ அந்தளவுக்கு அவரது தசை நார்கள் வலிமை பெறும். ஒருவர் எந்தளவுக்கு கற்கிறாரோ அந்தளவுக்கு அவரது அறிவு வளரும். அதே போல்தான் ஒருவர் எந்தளவு தனது கற்பனை வளத்தை பெருக்கிக்கொள்ள முயற்சிக்கிறாரோ அந்தளவுக்கு அவரால் சிறந்த ஐடியாக்களை வழங்க முடியும்.

இத்தகைய ஐடியாக்கள் உங்களுக்குள் பளிச்சிட்டால் நீங்களும் ஜீனியஸ் ஆகலாம். “சராசரி சிந்தனைக்குப் புலப்படாத இடங்களில் தன் உயர்ந்த சிந்தனை தரும் உத்வேகத்தால் தெளிவுடன் தேடி எளிதில் விடை காணும் வழியைக் கண்டு கொண்ட மனிதரைத்தான் ஜீனியஸ் என்பர்” என நெப்போலியன் ஹில் குறிப்பிடுகின்றார்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறைஷிகள் மக்காவிலிருந்து தங்களைத் தாக்கப் புறப்பட்டு விட்டார்கள் என்பதை அறிந்து, இப்போது என்ன செய்யலாம் என ஆலோசனை கேட்கிறார்கள். பலரும் பல ஐடியாக்களை முன்வைக்க, ஸல்மான் அல்பாரிசி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், “மதீனாவைச் சூழ அகழி தோண்டலாம்” என தனது ஐடியாவை முன்வைக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைஷிகள் மதீனாவை நெருங்கியதும் அதனைச் சூழ அகழ் தோண்டப்பட்டுள்ளதைக் கண்டு ஆச்சரியமடைகிறார்கள். அந்தப் பெரும் படை அந்த ஐடியாவின் முன் தோற்றுப் போகிறது.

யாருக்கும் தோன்றாத பளிச்சிடும் ஐடியாக்கள் மினுமினுத்த ஸ்டீவ் ஜொப்ஸ்தான் உலகிற்கு புதிய அப்பிள்களைத் தந்தார். ஐடியா பளிச்சிட்ட போது அலசி ஆராய்ந்த நியூட்டன்தான் புவியீர்ப்பு விதியைக் கண்டறிந்தார்.

உங்களுக்குத் தேவை ஒரே ஒரு ஐடியாதான். அது முதலாவது ஐடியாவாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல, 10,000க்குப் பின்னர் தோன்றும் ஐடியாவாகவும் இருக்கலாம்.

உங்கள் ஐடியாக்களுக்கு புது வடிவம் கொடுங்கள்



உங்கள் ஐடியாக்களை மற்றவர்கள் காண முடியாது; ஏன் உங்களால் கூட பார்க்க முடியாது. இப்படி உங்களுக்குள் மட்டும் சுற்றிக் கொண்டிருக்கும் ஐடியாக்களுக்கு கிராக்கி இருக்காது. உங்கள் ஐடியாக்கள் ஒரு பிரச்சினையின் தீர்வாக, ஒரு திட்டத்தின் முன்வரைபாக, ஒரு கண்டுபிடிப்பின் ஆரம்பமாக என ஏதோவொன்றாகத்தான் இருக்கும். எனவே, உங்கள் ஐடியாக்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துங்கள்; செயற்படுத்துங்கள். அப்போதுதான் மற்றவர்கள் அதனைக் காண்பார்கள்; மெச்சுவார்கள். விண்ணில் பறவையைப் போல் பறக்க வேண்டும் என்ற ஐடியாவை (சிந்தனையை) இப்னு பிர்னாஸ் முன்வைத்தபோது அவரைப் பைத்தியகாரன் என்றனர். அவர் பறந்தபோது மக்கள் மெய்மறந்தனர்.

உங்களிடம் என்ன வகையான கைத்தொலைபேசி வேண்டும்? என்று கேட்டால் என்ன கூறுவீர்கள்? புத்தம் புதிய வகையான நவீன வசதிகளுடன் கூடிய ஒன்றைப் பெறவே உங்கள் மனம் நாடும். அதேபோல்தான் மற்றவர்களும். உங்கள் ஐடியாவை பழைய கைத்தொலைபேசியாகக் கொடுத்தால் எடுபடாது. புதிய பாணியில் வித்தியாசமாக நவீனமாகக் கொடுங்கள். நீங்கள் கொடுப்பது பழையதானாலும் புதிதாக எடுபடும்.

உங்களிடமிருந்து உலகம் நிறையவே எதிர்பார்க்கிறது

எதிர்காலத் தலைவர்களான உங்களிடமிருந்து உலகம் எதிர்பார்ப்பது ஏராளம். ஆனால் உங்களுக்குள் உள்ளதை உங்களாலேயே அறிய முடியாதபோது எப்படி நீங்கள் மற்றவர்கள் எதிர்பார்ப்பதை வழங்க முடியும்? இன்று பலர் தொழில்முறை ஆலோசகர்களாக பணியாற்றுகின்றனர். அவர்களது ஒரு ஐடியாவுக்காக உலகம் எவ்வளவும் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

மூளைச் சோம்பல்

“ஐடியாவுக்கா பஞ்சம்!” என சிலர் கூறுவர். “எனக்கென்றால் எந்த யோசனையும் வரவில்லை” என பதிலளிக்கும் பலரை நீங்கள் கண்டிருப்பீர்கள். மூளைச் சோம்பலிலிருந்து விடுபட்டு சிந்தியுங்கள். அப்போது உங்களுக்கு பல ஐடியாக்கள் பொறி தட்டும். விடுக்கென்று அந்த ஐடியாவை செயற்படுத்த முயற்சியுங்கள். எத்தனை தோல்விகள் வந்தாலும் தளராத நம்பிக்கையுடன் பயணித்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகள் உங்களைக் கண்டாலே விரண்டோடிவிடும்.

மலிவு விலைப் புத்தகங்களை வெளியிடும் ஒருவருக்கு பொறி தட்டியது ஒரு ஐடியா. தனது வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் புத்தகத்திலுள்ள விடயத்தைப் பார்த்து புத்தகம் வாங்குவதில்லை. தலைப்பையும் முன் அட்டையையும் பார்த்துத்தான் அதனை வாங்குகிறார்கள் என்பதுதான் அவரது கண்டுபிடிப்பு. உடனே, அவருக்குத் தோன்றிய ஐடியா, விற்பனையாகாத ஒரு புத்தகத்தின் பெயரையும் முன் அட்டையையும் மாற்றி புதிய டிஸைனுடன் ஈர்க்கும் பெயருடன் புதிய புத்தகமாக வெளியானது. உள்ளடக்கம் ஒன்றுதான். ஆனால் 10 இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையானது அந்தப் புத்தகம். எல்லாம் ஒரே ஒரு ஐடியாதான். அது தான் கற்பனை வளம்!

ஒரு பிரபலமான உற்பத்திக் கம்பனியின் தயாரிப்புகளுள் ஒன்று சவர்க்காரம். ஒருமுறை அவர்களின் விற்பனையில் சவர்க்காரமின்றிய வெறும் மேல் கவர் மட்டும் கடைக்குச் சென்று விட்டது. எங்கே கோளாறு என்று ஆராய்ந்ததில் தொழிநுட்பக் கோளாறு என கண்டுபிடிக்கப் பட்டது. அந்தக் கம்பனியின் அவப் பெயரை நீக்க கூட்டம் கூட்டினார்கள்; ஆராய்ந்தார்கள். அவர்களின் ஊழியர்களிடமிருந்து தரமான ஐடியாக்கள் கேட்டனர்.

ஒரு சாதாரண ஊழியர் எழுந்தார். "இறுதியாக சோப் பைக்கற் செய்யப்பட்டு வரும் இடத்தில் காற்றை பலமாக வீசச் செய்தால்..."

அனைவரும் கொல் எனச் சிரித்து விட்டனர். "ம்... நீங்கள் சொல்லுங்கள்" அதிகாரி உத்தர விட்டார்.

"காற்றை வீசச் செய்தால்..."

"ஆம் நல்ல ஐடியா, காற்றை வீசச்செய்து பாரம் குறைந்த வற்றை வேறாக்கலாம். சரி, தொழிநுட்ப ரீதியாக இதனை செயற்படுத்துங்கள்" என அதிகாரி உத்தரவிட்டார்.

உங்களுக்கு தோன்றும் ஐடியாக்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். அனைவரிடமும் சொன்னால் சிரிப்பார்கள் என்றால் உங்களைப் புரிந்து கொண்ட உங்களைப் போன்ற ஐடியாக்கள் தோன்றும் மற்றவரிடம் சொல்லுங்கள்.

இங்கிலாந்தில் கற்றுக் கொண்டிருந்த மாணவனுக்கு கல்விச் செலவை ஈடு கொடுக்க முடியவில்லை. என்ன செய்வதென்று சிந்தித்தான். ஐடியா பளிச்சிட்டது. ஒரு இணையதளத்தை உருவாக்கி அதில் குறைந்த விலையில் விளம்பரம் செய்யலாம் என அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரித்தான். மெல்ல மெல்ல விளம்பரங்கள் வரத் தொடங்கின. பின்னர் விளம்பரங்கள் குவிய அவன் கட்டணங்களை ஒழுங்காகச் செலுத்தி கற்கத் தொடங்கினான்.

தனது நண்பர்களைத் தேடிய Mark Zuckerbergக் குத் தோன்றிய ஐடியாதான் இன்று உலகில் பலரை மூழ்கடித்துள்ள பேஸ் புக். மார்க்கோனிக்குத் தோன்றிய ஐடியாதான் ஒலி அலைகளை வளியினூடாக அனுப்ப முடியும் என்பது. அதுவே வானொலியானது. கிரகம்பெல்லுக்குத் தோன்றிய ஐடியாதான் தொலைபேசி. ஒரு மனிதனுக்கு தோன்றிய ஐடியாதான் நுரைக்கும் பானம், கொகா கோலா. கோப்பிக் கடை வைத்து முன்னேற முடியுமா நம் நாட்டில்? ஆனால் Starbuks எனும் நிறுவனம் கோடி கோடியாக சம்பாதிக்கிறது.

இப்படி ஏராளமான உதாரணங்களை ஐடியாவுக்குச் சொல்லிக் கொண்டே போகலாம். இப்போது உங்களுக்கு ஏதாவது ஐடியாக்கள் வந்திருக்கிறதா?

" உங்களுக்கு தோன்றும் ஐடியாக்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். அனைவரிடமும் சொன்னால் சிரிப்பார்கள் என்றால் உங்களைப் புரிந்து கொண்ட உங்களைப் போன்ற ஐடியாக்கள் தோன்றும் மற்றவரிடம் சொல்லுங்கள். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World Today



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

உலகில் ஜனரஞ்சகமிக்க போட்டியாக உதைபந்தாட்டத்திற்கு அடுத்த நிலையில் காணப்படும் கிரிக்கெட்டில் பிரதான போட்டியாக விளங்குவது டெஸ்ட் போட்டி ஆகும். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியானது 1887-03-15இல் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது டெஸ்ட் போட்டி, அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் மைதானத்தில் இங்கிலாந்து, நியூ சௌத் வேல்ஸ் மற்றும் விக்டோரியா பிராந்திய (தற்போதைய அவுஸ்திரேலிய) அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. 2012-03-15 இல் டெஸ்ட் கிரிக்கட் போட்டியின் 135 வருட நிறைவு கொண்டாடப்பட்டது.

உலகில் சிறந்த துடுப்பாட்ட வீரரும் முன்னிலை வீரரும்

'கிரிக்கெட்டின் பைபிள்' என வர்ணிக்கப்படும் விஸ்டன் (Wisden) சஞ்சிகை யானது 1864ம் ஆண்டு முதல் வெளிவருகின்றது. இச்சஞ்சிகையினால் 1889ம் ஆண்டிலிருந்து வருடாந்தம் ஐந்து துடுப்பாட்ட வீரர்களும் 2004ம் ஆண்டிலிருந்து வருடாந்தம் உலகின் முன்னிலை வீரரும் விருதுகளுக்காக தெரிவு செய்யப்படுகின்றனர். 2011ம் ஆண் டில் மேற்படி விருதுகளைப் பெற்ற வீரர்களில் ஒருவராகவும், இவ் இரு விருதுகளையும் ஒரே தடவையில் பெற்ற முதலாவது வீரராகவும் இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரும் விக்கட் காப்பாளருமான குமார் சங்கக்கார தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் 2011ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்டில் 2267 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

டைட்டானிக் நூறு ஆண்டுகள் நிறைவு



'மிதக்கும் சொர்க்கம்' என அழைக்கப்பட்ட டைட்டானிக் கப்பல் 1907 இல் 270 மீற்றர் நீளமும் 28 மீற்றர் அகலமும் 46,329 தொன் எடையும் கொண்ட பாரிய ஆடம்பர பயணிகள் கப்பலாக உருவாக்கப்பட்டது. இக்கப்பல், கெப்டன் எட்பேர்ட்.ஜே. ஸ்மித் என்பவரின் தலைமையில் 1912 ஏப்ரல் 10 இல் இங்கிலாந்தில் உள்ள சவுதாம்டனில் இருந்து சேர்பர்க், பிரான்ஸ் மற்றும் அயர்லாந்தில் உள்ள குயின்ஸ்டவுண் வழியாக நிவ்யோர்க்கை சென்றடைய திட்டமிடப்பட்டிருந்தது. இக் கப்பல் 1912 ஏப்ரல் 14 நள்ளிரவில் அட்லாண்டிக் கடலில் சென்று கொண்டிருந்தபோது பனிப் பாறையுடன் மோதி விபத்திற்குள்ளாகி, 1912 ஏப்ரல் 15 இல் முற்றாக கடலில் மூழ்கியது. இதில் 1514 பேர் உயிரிழந்தனர். உலகில் மிகப் பெரிய கப்பல் அனர்த்தமாக வரலாற்றில் பதிவு செய்து கொண்ட இதன் நூறாவது நினைவு தினம் 2012 ஏப்ரல் 15 இல் அனுஷ்டிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் அதிக ஊழியர் கொண்ட நிறுவனம்

உலகில் அதிக ஊழியர் கொண்ட நிறுவனமாக அமெரிக்க இராணுவம் விளங்குகின்றது. இங்கு மொத்தம் 32 இலட்சம் பேர் வரை பணியாற்று கின்றனர்.

மாலாவியின் புதிய ஜனாதிபதி

2012 ஏப்ரலில் ஜனாதிபதியாக பதவி வகித்த பிங்கு வா முதாறிகா மாரடைப்பினால் மரண மானதை அடுத்து மாலாவியில் ஜனாதிபதி வெற்றிடம் ஏற்பட்டது. இதனையடுத்து உப ஜனாதிபதியாக கடமையாற்றிய ஜொய்ஸ் பண்டா புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றார். இவர் 2009இல் உப ஜனாதிபதியாக பதவி ஏற்றபோது தென் ஆபிரிக்க பிராந்திய நாடொன் றின் முதல் உப பெண் ஜனாதிபதி என்ற பெருமை யையும் தற்போது தென் ஆபிரிக்க பிராந்திய நாடொன்றின் முதலாவது பெண் ஜனாதிபதி எனும் பெருமையையும் பெற்றுள்ளார். இவர் 2011ம் ஆண்டு ஆபிரிக்காவின் சக்தி வாய்ந்த பெண்களில் மூன்றாவது பெண்மணியாக போப்ஸ் சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

உலக நீர் தினம்

ஒவ்வொரு வருடமும் மார்ச் 22இல் அனுஷ் டிக்கப்படுகின்றது. இவ் ஆண்டின் தொனிப் பொருள் 'நீர் மற்றும் உணவுப் பாதுகாப்பு' என்ப தாகும். 2025ம் ஆண்டில் உலக சனத்தொகையில் 40% ஆனோர் சுத்தமான குடிநீரின்றி அவதிப்படு வர் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் புதிய ஜனாதிபதி

2012 பெப்ரவரியில் முன்னாள் ஜனாதிபதி யான கிறிஸ்டியன் வூல்ப் நிதி ஊழல் குற்றச் சாட்டினால் பதவி விலகினார். இதன்போது ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்கு 2012 மார்ச்சில் முன்னாள் மத குருவான ஜோகிம் கோக் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் 1232 வாக்குகளில் 991 வாக்குகளைப் பெற்றுத் தெரிவானார். பண்டைய கிழக்கு ஜேர்மனியை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாவது இதுவே முதல் தடவை ஆகும். மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் ஜனாதிபதி பதவிக்கு நடைபெற்ற மூன்றாவது தேர்தல் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

நில நடுக்கமும் சுனாமியும்



கடலுக்கு அடியில் ஏற்படும் நில நடுக்கத்தால் நீர் உந்தப்பட்டு மிகப் பெரிய அலைகள் ஏற்படு கின்றன. இது கரையைத் தாண்டி சேதத்தை ஏற்ப டுத்துவதையே சுனாமி என்கிறோம். 'சுனாமி' எனும் ஜப்பானிய மொழிச் சொல்லுக்கு துறைமு கம் மற்றும் அலைகள் என்பதே பொருளாகும்.

2012 ஏப்ரலில் இந்தோனேஷியாவிலிருந்து 269 மைல்கள் தொலைவில் உள்ள வட சுமாத் ராவின் மேற்கு கரையோரத்திற்கு அப்பால் பண்டா ஆக்சே பிராந்தியத்தில் சுமார் 33 கடல் மைல் ஆழத்தில் 8.7 மற்றும் 8.6 ரிச்டர் அளவுகளில் பாரிய இரண்டு நில நடுக்கங்கள் உருவானதை அடுத்து இலங்கை உட்பட ஆசிய நாடுகளிலும் இதன் தாக்கம் உணரப்பட்டது. இதையடுத்து இலங்கை, இந்தோனேசியா, இந்தியா, அவுஸ்தி ரேலியா, மியன்மார், தாய்லாந்து, மாலைதீவு, ஐக்கிய ராச்சியம், மலேசியா, ஓமான், ஈரான், பங்களாதேஷ், கென்யா, தென்னாபிரிக்கா, சிங் கப்பூர் உட்பட இருபத்தெட்டு நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந் நில நடுக்கம் நிலத்திற்கு சமாந்தரமாக ஏற்பட்டதால் பாதிப்பு ஏற்படவில்லை. 2004 டிசம்பரில் இலங்கையைத் தாக்கிய சுனாமி இறுதியாக 2011 மார்ச்சில் ஜப் பானை தாக்கியமையும் குறிப்பிடத் தக்கது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பாடல் திரட்டு (தொடர்ச்சி)

பாடல்: கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியில் தான் பண்ணினானே.

வினா: "கல்லைத்தான் என்று தொடரும் பாடலின் பொருளையும் மையக்கருத்தினையும் தருக.

விடை: **பொருள்:**

தாமரைப் பூவிலிருக்கும் பிரமன், கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா? குடியிருக்க வீட்டையும் செலவழிக்கப் பொருளையும் எனக்குத்தான் கொடுத்து இரட்சித்தானா? நான் படுந்துயரத்தைக் கூறி யாரைத்தான் நொந்து கொள்வது? ஐயோ! எங்கும் பல்லைத்தான் திறக்கத்தான் பூமியில் நம்மை படைத்து விட்டானே!

மையக்கருத்து:

மற்றவர்களிடம் இரந்து வாழ வேண்டியதொரு வறுமை நிலையில் தன்னைப் படைத்தமைக்காக, படைத்தற் கடவுளான பிரமன் நிந்திக்கப்படுகின்றான்.

வினா: இப்பாடலில் வந்துள்ள சொல்லணியை விளக்குக.

இங்கு எதுகை, மோனை அணிகள் விரவிக் காணப்படுகின்றன.

எதுகை-கல்லை, இல்லை, அல்லை, பல்லை (புலவனின் வறுமை நிலையையும்)

மோனை- தான், தான், தான் (புலவனின் அங்கலாய்ப்பு, எதிர் பார்ப்பு வறுமை நீங்க வேண்டுமென்ற வேதனையையும் புலப்படுத்தி நிற்கிறது).

வினா: "கல்லைத்தான்..." என்று தொடரும் பாடலைப் பாடியவர் யார்? அவரைப் பற்றி சிறு அறிமுக விளக்கம் தருக.

விடை: பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'இராமச்சந்திர கவிராயர்' என்பவரே இப்பாடலைப் பாடியவர். மிகவும் எளிய சொற்களைப் பயன்படுத்தி தனது கருத்துக்களை நகைச்சுவையுடன் பாடல்களில் வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க இவர் தொண்டை நாட்டில் பிறந்தவர். பல தனிப்பாடல்களைப் பாடியுமிருக்கிறார்.

வினா: "கல்லைத்தான்..." என்று தொடரும் பாடலில் நயத்தினை பரிசீலிக்குக.

விடை: வறுமைப்பட்ட புலவனின் உள்ளத்து வேதனைகள் படம்பிடித்துக் காட்டப் படுகின்றன. 'பல்லைத்தான் திறக்கத் தான்' என்று கேட்பதும் தவிப்பதும்; 'அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத் தான் நோவத்தான் ஐயோ!' என்பதும் புலவனின் வறுமையில் தோன்றும் கேலியும் கிண்டலும் உணர்ச்சி வேகமும் பளிச்சிட்டு புலப்படுவது நயத்திற்குரியது. சொல்லணிகளான எதுகை, மோனை அணிகள் இக்கவிக்கு ஓசை அழகையும் மையக்கருத்தை சிறப்பித்தும் நிற்கின்றன எனலாம்.

பாடல்: மஞ்சும் அஞ்சும் கை பரராஜ சேகர மன்னன் வெற்பில்
பஞ்சும் அஞ்சும் பதம்பாவை நல்லாய் படை வேள் பகழி
அஞ்சும் அஞ்சும் கயல் அஞ்சும் கடல் அஞ்சும், அஞ்சும்
நஞ்சும் அஞ்சும் வெற்றி வேலோ உனது நயனங்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா: மேல் வந்த பாடலைப் பாடியவர் யார்?

விடை: நமசிவாயப் புலவர் (இவர் பல்வேறு தனிப் பாடல்களைப் பாடியிருக்கிறார். மன்னர் பெருந்தகைகள், வள்ளல்கள் போன்றோரைப் பாடிப் புகழ்ந்து பரிசில்கள் பெற்றிருக்கிறார்.)

வினா: "மஞ்சுமஞ்சுங்..." என்று தொடரும் பாடலின் பொருளையும் சிறப்பினையும் எழுதுக.

விடை: **பொருள்:**

மேகமும் பயப்படும்படியான ஈகையுடையவனாகிய பரராஜ சேகர வேந்தனது மலையிலிருக்கும், மென்மைத் தன்மையில் பஞ்சும் பயப்படத்தக்க அடிகளையுடைய பதுமை போன்ற அழகியே! மன்மதனுடைய அம்புகள் ஐந்தும் மிகுதியும் பயப்படும். கயல் மீன்களும் மிகுதியாகப் பயப்படும். கடலும் மிகுதியாகப் பயப்படும். விடமும் (விசமும்) மிகுதியாகப் பயப்படும். உன்னுடைய கண்கள் வெற்றியைத் தருகின்ற வேல் போன்றனவே.

சிறப்பு: கொடையில் சிறந்த மன்னனா்ன பரராஜ சேகரனது நாட்டு மலைப்பகுதியில் வாழ்கின்ற ஒரு பெண்ணின் கண்களின் அழகை வியந்துரைக்கும் இப்பாடல் பொருளழகு, சொல்லழகு கொண்டதாக விளங்குகிறது.

உயர்வு நவிற்சி அணி மூலம் பரராஜ சேகரனது கொடைத்திறனை கவிஞர் புலப்படுத்துகிறார். இரண்டாம் எழுத்து ஒன்றி வர அமைவது எதுகை அணியாகும். இப்பாடலில் மஞ்சு, அஞ்சு, நஞ்சு என எதுகை அணி கையாளப்பட்டிருக்கும் அதேவேளை அஞ்சும்-அஞ்சும் என்ற எதுகை அணியில் ஒரு சொல் பல்வேறு பட்ட கருத்தை உணர்த்த புலவர் பாடியிருக்கும் விதம் சிறப்பைத் தருகிறது. அத்துடன் "வெற்றி வேலோ உனது நயனங்களோ" என்று உவமை அணி மூலம் அழகியின் கண்கள், விடம் அஞ்சக் கூடியது, காணும் அனைத்தும் அஞ்சக் கூடியது அதனால் வெற்றி தரும் கண்கள் அக்கண்கள் என உவமித்துப் பாடியிருக்கும் விதம் கவிஞரது கவித்துவ சிறப்பைப் புலப்படுத்துகிறது.

இவ்வாறாக மன்னனின் சிறப்பும் அங்கும் வாழும் பெண்களின் கண்களின் அழகும் உணர்த்தப்பட்டுள்ளன எனலாம்.

–தனிப்பாடல் திரட்டு முற்றும்–

(மீண்டும் புதிய பகுதியுடன், இன்ஷா அல்லாஹ்)

(33ஆம் பக்க தொடர்)

இருவாயி வகைகள்

இருவாயி வகை	சுற்றுக் குறியீடு	பயன்பாடு
1. சீராக்கும் இருவாயி		ஆடேலோட்ட மின்னை நேரோட்டமாக மாற்றப் பயன்படும்.
2. புள்ளித்தொடுகை இருவாயி		வானொலி அலைகளையும் கேள்மீடிறன் அலைகளையும் வேறாக்குவதற்கு பயன்படும்.
3. சேனர் இருவாயி		மின்சாதனங்களை உயர் மின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப் பயன்படும்.
4. ஒளியுணர் இருவாயி		கமரா, ஒளியுணர் சாதனங்களில் பயன்படும். பாதை சமிக்ஞை விளக்குகளில் பயன்படும்.
5. ஒளிகாலும் இருவாயி (LED)		மின்சாதனங்களில் காட்டி விளக்காகப் பயன்படும்.

திரான்சிற்றர்

- pவகை, nவகை குறைகடத்திகளின் *3* பகுதிகள் இணைந்து அமைக்கப்படும் சாதனம் திரான்சிற்றர் ஆகும். இது *2* வகைப்படும்.

i. pnp திரான்சிற்றர் 

ii. npn திரான்சிற்றர் 

வினா3.

i. திரான்சிற்றர் ஒன்றின் அடி (b) உடன் ஓர் உயர் தடை இணைக்கப்படுவதற்கான காரணம் யாது?

ii. திரான்சிற்றரின் பயன்பாடுகள் இரண்டைத் தருக.

iii. ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று (IC) ஒன்றினுள் காணப்படும் துணைக் கூறுகள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

நாளைய தலைவர் நீங்கள்

தலைமைத்துவம் என்பது பலராலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு பதமாக இன்று மாறியுள்ளது. பலர் இணைந்து நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு காரியம் வெற்றிகரமாக நிகழ அங்கு தலைமைத்துவம் இன்றியமையாததாக அமைகிறது. பாடசாலை வாழ்க்கை, தொழில் வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, விளையாட்டு மற்றும் பிரயாணம் போன்ற சந்தர்ப்பங்களை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

இங்கு குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்களை நிர்ணயித்து, ஒழுங்குபடுத்தி அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றத் தேவையான திட்டங்களைத் தீட்டி அத்திட்டங்களை அமுலாக்க தம்மோடுள்ள பலரையும் ஆர்வத்தோடு பங்குபற்றச் செய்வதற்கும் குறித்த செயற்பாடுகளின்போது ஏற்படக்கூடிய முரண்பாடுகள், சிக்கல்களுக்குத் தீர்வுகளைப் பெறும் வழிகளைக் காட்டிக் கொடுப்பதற்கும் தலைவர் ஒருவர் இருக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

அந்த வகையில் பாடசாலை வாழ்க்கையிலும் பிற்பட்ட சமூக வாழ்க்கையிலும் சிறந்த தலைவர்களாக விளங்க மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படையான அம்சங்களை பின்வரும் தலைப்புகளில் நோக்குவோம்.

1. தலைமைத்துவம் என்றால் என்ன?
2. செயற்திறன் மிக்க தலைமைத்துவம் என்றால் என்ன?
3. தலைமைத்துவத்தின் வகைகள்.
4. மாணவர்களும் தலைமைத்துவத் திறன்களின் அவசியமும்.
5. பாடசாலையில் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள்.
6. தலைவர் ஒருவரிடம் காணப்படவேண்டிய முக்கிய பண்புகள்.

1. தலைமைத்துவம் என்றால் என்ன?

தலைமைத்துவம் என்பது, ''வற்புறுத்தல், வலுக்கட்டாயமில்லாத வழிமுறைகளினூடாக மக்களைச் செயற்பட ஊக்குவிப்பதன் மூலம் ஒரு திட்டமிட்ட திசையில் நகர்த்திச் செல்லும் செயன்முறையாகும். அத்திசை நீண்ட கால குறிக்கோளை நோக்கியதாகவோ அல்லது குறுகிய கால குறிக்கோளை நோக்கியதாகவோ அமையலாம்.''

ஒரு குழுவின் தலைவர் என்பவர், ஒரு குறித்த அந்தஸ்து வழங்கப்பட்டு, அதற்குப் பொருத்தமான முறையில் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அங்கத்தவராவார். அத்தோடு, தமது குழுவின் இலக்குகளை அமைப்பதிலும் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதிலும் செல்வாக்குச் செலுத்த வேண்டிய ஒருவராகவும் இருக்கிறார்.

2. செயற்திறன் மிக்க தலைமைத்துவம் என்றால் என்ன?

செயற்திறன் மிக்க தலைமைத்துவம் என்பது தூரநோக்கு ஒன்றை (Vision) உருவாக்கி, அதை அடைவதற்கான செயல் நுணுக்கத்தை விருத்தி செய்து, பிறரின் ஒத்துழைப்பைத் திரட்டி, தூரநோக்கை அடைந்து கொள்வதற்கான செயற்பாட்டை ஊக்குவிக்கின்ற ஒரு செயல்முறை ஆகும். செயற்திறன் மிக்க தலைவரானவர்...

- எதிர்காலம் பற்றிய தூர இலக்கை (Vision) உருவாக்குவார்.
- அத்தூர இலக்கை நோக்கி இயங்குவதற்கென அறிவுபூர்வமான செயல் உபாயங்களை (Strategies) விருத்தி செய்வார்.
- அவ்வாறு இயங்குவதற்கு அவசியமாகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY JAFFNA

ஒத்துழைப்பையும் இணக்கத்தையும் குழு முயற்சியை வழங்கக்கூடிய முக்கியமான கூட்டத்தினரின் ஆதரவையும் திரட்டுவார். (Team building and get support from them)

- செயல் உபாயங்களை (Strategies) அமுல்படுத்தும் விடயத்தில் முக்கிய பங்கெடுத்துத் தொழிற்படக் கூடிய ஆட்களை நல்ல முறையில் ஊக்குவிப்பார் (Motivation).

3. தலைமைத்துவத்தின் வகைகள்

பல்வேறுபட்ட தலைமைத்துவ வகைகள் பற்றி ஆய்வு செய்வதற்காக 1939ஆம் ஆண்டு **கேட் லீவின்** என்ற உளவியலாளரின் தலைமையின் கீழ் ஒரு குழு நியமிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவில் 3 வகையான தலைமைத்துவ வகைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆய்வு பாடசாலைச் சிறுவர்கள் மத்தியிலேயே மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1) ஏகாதிபத்திய தலைமைத்துவம் Authoritarian Leadership (Autocratic)

ஏகாதிபத்திய தன்மை கொண்ட தலைவர்கள் என்ன வேலை, எப்போது, எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்ற தெளிவான எதிர்பார்ப்பை முன்வைக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். தலைவருக்கும் அவரைப் பின்தொடர்கின்றவர்களுக்கும் இடையில் மிகத் தெளிவான வேறுபாடு காணப்படும். இத்தகைய தலைவர்கள் தம்முடன் இணைந்து பணியாற்றுகின்ற ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களை செவிமடுக்காது சுதந்திரமாக தீர்மானங்களை எடுப்பவர்களாகக் காணப்படுவர்.

இத்தகைய தலைமைத்துவத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள், புத்தாக்கம் குறைந்ததாகவே காணப்படும் என்பது ஆய்வாளர்களின் முடிவு.

ஒரு குழு ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்தை எடுப்பதற்குப் போதிய அவகாசம் இல்லை என்ற சந்தர்ப்பத்திலும், குறிப்பிட்ட ஒரு குழுவுக்குத் தலைமை தாங்கும் ஒருவர், அக்குழுவில் தன்னை விட அறிவார்ந்தவர் யாருமில்லை என்ற நிலையிலும் இத்தகைய சர்வதிகாரத் தலைமைத்துவம் மிகச் சிறப்பாக பயனளிக்கும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

2) பங்கு கெள்ளும் அல்லது ஜனநாயகவாத தலைமைத்துவம் Participative Leadership (Democratic)

கேட் லீவினால் முன்வைக்கப்பட்ட இவ்வகைத் தலைமைத்துவம் பொதுவாக தாக்கம்மிக்க ஒன்றாகக் காணப்படுகின்றது. ஜனநாயகவாதத் தலைவர்கள் தமது குழு உறுப்பினர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குகின்றனர். மட்டுமன்றி தாங்களும் அக்குழுவில் ஒருவராகப் பங்கு கொள்வதோடு தமது குழுவில் உள்ள ஏனைய ஊழியர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கின்றனர்.

லீவினின் இந்த ஆய்வின்படி, இத்தலைமைத்துவப் பண்பைக் கொண்ட குழுவில் இருந்த மாணவர்கள் முந்திய குழுவைவிட செயற்திறன் குறைந்தவர்களாகக் காணப்பட்டனர். எனினும் இக்குழுவின் பங்களிப்பு மிக உயர்ந்த தரத்தைக் கொண்டிருந்தது.

பங்கு கொள்ளும் அல்லது ஜனநாயகப் பண்பைக் கொண்ட தலைவர்கள் தமது தலைமைத்துவச் செயன்முறையில் ஏனைய உறுப்பினர்களும் பங்கு கொள்ளும் வகையில் ஊக்குவிப்பு வழங்கினாலும் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் இறுதி அதிகாரத்தை தம்மிடம் வைத்துக் கொள்வர்.

3) பகிர்ந்தளிக்கும் தலைமைத்துவம்/ கட்டுப்பாடற்ற நிலை Delegative (Laissez-Faire) Leadership

இத்தலைமைத்துவத்துவப் பண்பைக் கொண்ட தலைவர்கள், தமது தலைமைத்துவத்தின் கீழ் உள்ளவர்களுக்கு மிகக் குறைந்தளவு வழிகாட்டல்களை வழங்கக்கூடியவர்களாக அல்லது அறவே வழிகாட்டாதவர்களாக இருப்பர். தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை தமது குழு உறுப்பினர்களிடம் கொடுத்து விடுவர்.

குழு உறுப்பினர்கள், குறிப்பிட்ட விடயத்தில் துறைசார்ந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் இவ்வகையான தலைமைத்துவம் தாக்கமுள்ளதாக இருக்கும். எனினும் ஊக்கம், சுறுசுறுப்பு என்பன குறைந்ததாகவே காணப்படும்.

இம்மூன்று வகையான தலைமைத்துவங்களிலும் இரண்டாம் வகையான தலைமைத்துவம் சிறப்பானது எனினும், ஏனைய இரு வகையான தலைமைத்துவங்களும் சிற்சில சந்தர்ப்பங்களில் பயனளிக்கத்தக்கன என்பது குறிப்பிடத்தக்கது.

4. மாணவர்களும் தலைமைத்துவத் திறன்களின் அவசியமும்

பாடசாலை, பள்ளிவாசல், நலன்புரி மன்றங்கள், இளைஞர் கழகங்கள் போன்ற சமூக நிறுவனங்களில் கடமையாற்றுகின்றவர்களிடம், "பாடசாலை மாணவர்கள் எத்தகைய விடயங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர் கள்?" என்று வினவினால் பெரும்பாலானோர், "தலைமைத்துவத் திறன்களையும் பண்புகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும், அப்போதுதான் அவர்களால் தங்கள் சமூகத்திற்கு உதவி செய்திட முடியும்" எனப் பதிலளிப்பதைக் காணலாம்.

இன்னும் ஆச்சரியமூட்டத்தக்க விடயம் என்னவெனில், அதிகமான தொழில் நிறுவனங் கள்கூட தமது ஊழியர்களாக இத்தகைய தலை மைத்துவத் திறன்களைக் கொண்ட பட்டதாரி களையே எதிர்பார்ப்பதாகும்.

உண்மையில் இன்றைய மாணவர்கள்தான் நாளை நாம் முன்னோக்கிக் கொண்டிருக்கும் எதிர்காலத்தின் தலைவர்களாக இருக்கின்றனர். நாளைய சமூகத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் பொறுப்பும் கடமையும் இவர்களையே சாரும் என்பதால், பாடசாலைக் காலங்களிலேயே தலைமைத்துவப் பண்புகளை யும் திறன்களையும் ஒரு மாணவன் பெற்றுக் கொள்வது அவசியமாக அமைகிறது.

குறித்த ஒரு சமூகம், கல்வி கற்ற ஒரு மேதைக் குப் பின்னால் செல்வதைவிட, கல்வியோடு தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் கொண்ட ஒருவருக்குப் பின்னால் செல்வதையே விரும்புகின்றது. அதையே பாதுகாப்பானது என வும் நம்புகின்றது. அந்தவகையில் பாடசாலைக் காலங்களிலேயே தலைமைத்துவப் பண்புகளை யும் திறன்களையும் பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகக் காணப்படுகிறது.

5. பாடசாலையில் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள்

i. விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள்
ii. மாணவர் மன்றம்
iii. காலை ஆராதனை நிகழ்ச்சிகள் - Morning Assembly
iv. பாடசாலைச் சிரமதானங்கள்
v. மாணவர் பாராளுமன்றம் (Student Parliament)
vi. பாடசாலை நிகழ்ச்சிகள்
vii. மாணவர் தலைமைத்துவம் (Prefect)
viii. சாரணர் பயிற்சி முகாம்
ix. சுற்றுலா
x. முதலுதவிப் பிரிவு (First Aid)
xi. இசை, வாத்தியப் பிரிவு (Band)
xii. பாடசாலைக் கழகங்கள்

இதுபோன்ற இன்னும் பல நிகழ்ச்சிகள் மாண வர்களின் தலைமைத்துவத் திறன்களை வளர்க் கும் சந்தர்ப்பங்களாக அமைகின்றன. இவை தவிர ஆசிரியர்களால் திட்டமிட்டு ஏற்பாடு செய் கின்ற விஷேட நிகழ்ச்சிகளும் மாணவர்களின் தலைமைத்துவத் திறன்களையும் பண்புகளையும் விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களாக அமை கின்றன.

6. தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகள்

மாணவர்களாயினும் சரி, ஏனையவர்களாயி னும் சரி ஒருவர் சிறந்த தலைவராக மாறுவதற்கு அதற்கே உரிய பண்புகளை அவர் தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமாகும்.

அந்தவகையில் ஒரு தலைவரிடம் காணப்பட வேண்டிய மிக முக்கியமான பண்புகளை பின்வரு மாறு பட்டியற்படுத்தலாம்:

1) உண்மைத் தன்மை / நம்பகத்தன்மை (Integrity)
2) தூரநோக்கான சிந்தனை (Visionary Thinking)
3) தொடர்பாடற் திறன் (Communication Skill)
4) ஏனையவர்களுடன் சுமுகமான உறவு (Relationship)
5) செல்வாக்குச் செலுத்தும் தன்மை (Persuasion / Influence)
6) நெகிழ்வுத் தன்மை (Adaptability)
7) குழுவாகச் சேர்ந்து வேலை செய்யும் பண்பு (Teamwork)
8) பயிற்சியளித்தலும் விருத்தி செய்தலும் (Training and Development)
9) தீர்மானிக்கும் ஆற்றல் (Decision making)
10) திட்டமிடல் (Planning)
11) கலந்துரையாடல் (Discussion)

இவை தவிர இன்னும் பல பண்புகளும் காணப்படுகின்றன. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் முழு வாழ்க்கையும் தலை மைத்துவத் திறன்களும் தலைமைத்துவப் பண்புக ளும் நிறைந்ததாகவே காணப்படுகிறது. முஹம் மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் கள்தான் எங்களுடைய முன்மாதிரிமிக்க தலைவர் என்ற வகையில் அவர்களுடைய வாழ்க்கை வர லாற்றைப் படிப்பதனூடாக அத்தகைய தலை மைத்துவப் பண்புகளையும் திறன்களையும் தேடி யறிந்து நமது பாடசாலை வாழ்க்கைக் காலத்தி லேயே அவற்றைச் செயற்படுத்துவதனூடாக சமூகத்தின் சிறந்த தலைவர்களாக மாற்றுவதற்கு முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY JAFFNA

கவிதைச் சரம்

மழைத்துளி

பாவம் வானுக்கு
என்ன சோகமோ
ஓயாமல் வடிக்கிறது
முத்துத் துளிகளை

வானமே!
உன் கவலையையும்
கலக்கத்தையும் நீக்கி
உன் கண்களில் இருந்து
வரும் துளிகளா
இம்மழைத்துளிகள்?

உன் இதயம்
மன வேதனையால் துளைக்கப்பட்டு
வடிகின்ற கண்ணீர் துளிகளா
இம்மழைத்துளிகள்?

நீயும் வளியும்
சண்டையிட்டதால் உன்
கண்களிலிருந்து
ஏற்பட்ட இரத்தத் துளிகளா
இம்மழைத்துளிகள்?

கருமுகிலைக் கொண்டு – நீ
எழுதிய கவிதைகள்தான்
இப்பெருமழையோ?

அரபாத், தரம்: 11
பொ/ அல்ஹிலால் ம., தம்பபாளை

என் வாழ்வின் சுடர் தீபம்

என் வாழ்வுக்கு நிகராக
சுடர் வீசிய அன்புதனை
கலங்காமல் பகிர்ந்தளித்த
என் அன்புத் தாயே!

என் கவி வரியின் பிறப்பிடம்
நீயே
இலை மறை காயாய் இருந்த
என் கவிதைக்கு வரி வடிவம்
கொடுத்து
தீபம் இட்ட ஒளி விளக்கு
நீயே!

என்றும் கலங்காத உயரிய
பண்புடன் வாழ வழிகாட்டிய -
உனை
என்றும் மறவேன் - என்
உயிர் மூச்சு பிரியும் வரை.

எம்.எஸ்.எப். சப்ரா
பொ.மு.ம. வி.

எந்தக் கண் கொண்டு மறப்பேன்

உயிர் கொண்ட உறவாய்
இருந்த காலத்தில்
உறவு நீ என புரியவில்லை
உயிரே நீயான நிஜப் பொழுதில்
உன் உணர்வுகளின் தடங்கள்
மட்டுமே கை கொடுக்கின்றன

சோக அலைகளை
சுமந்த உள்ளம்
சுதந்திரமாய் வாழ்ந்த
சரித்திரம் உண்டோ

தாயான நீ தாலாட்டுப் பாடி
கரம் நீட்டி நிலவைக் காட்டி
தலை சீவி அன்பைப் பொழிந்து
மறுகணமே பிரிந்துவிடு என்று
என்னை வதை செய்த
உன் நினைவுகளை
எந்தக் கண்
கொண்டு மறப்பேன்!

சலீம்கான் தாஹிரா
வாழைச்சேனை

சூரிய காந்தி

ஞாயிறு வருகையில்
ஞாபகித்து விழிப்பாய்
விடியலை நோக்கியே - உன்
இதழ்களை விரிப்பாய்
இனியவர் மனதில்
இடம் பிடிப்பாய்

அமைதியான குணத்தில்
அந்நியரை ஈர்ப்பாய்
பெண்களைப் போலவே
பொறுமையாய் இருப்பாய்
நீ எப்படி சூக்கிரனை
நோக்கித் திரும்புகிறாயோ
அதே போல் கல்வியை நோக்கிச்
செல்ல
மாணவர்களுக்கு கற்றுக் கொடு
சூரிய காந்தியே!

ஏ.எம். பாத்திமா ரிஹாசா, தரம் – 10, புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,11 தர மாணவர்களுக்கானது

விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

சடப்பொருளின் கட்டமைப்பு– தரம் 10

- அகிலமானது சக்தி மற்றும் சடப்பொருட்களை உள்ளடக்கியதாகும்.
- இடத்தை அடைப்பதும் திணிவுடையதுமான பொருள் சடப்பொருள் ஆகும்.
- சடப்பொருட்கள் மூலகங்கள், சேர்வைகள் என இரு வகைப்படும்.
- சடப்பொருட்களின் ஆக்கக்கூற்று அலகு அணு ஆகும். இது புரோத்தன், நியூத்திரன், இலத்திரன் எனும் 3 துணிக்கைகளாலானது.

வினா1. உப அணுத் துணிக்கைகள் தொடர்பான பின்வரும் விபரங்களை புள்ளிக்கோட்டில் எழுதிப் பூரணப்படுத்துக.

உப அணுத்துணிக்கை	ஏற்றம்	திணிவு (amu)	குறியீடு	கண்டுபிடித்தவர்
1. புரோத்தன்	+1	1 அலகு		....
2. இலத்திரன்	-1	$\frac{1}{1840}$ அலகு	${}^{0}_{-1}e$	....
3. நியூத்திரன்	....		${}^{1}_{0}n$	ஜேம்ஸ் சட்விக்

அணு மாதிரியுரு பற்றிய கருத்துக்கள்

1. பிளம்புடிங் மாதிரியுரு (J.J.தொம்சன்):-

அணுவானது நேரேற்றமுடைய கோளம் ஒன்றினுள் மறையேற்றமுடைய இலத்திரன் கள் பதிந்துள்ள அமைப்பாகும்.

2. கோள் மண்டல அல்லது கோளக மாதிரியுரு (இரதபோர்ட், நீல் போர்):-

அணுவிற்கு நேரேற்றத்தையும் திணிவையும் கொடுக்கும் துணிக்கைகள் அணுவின் மத்தியில் மிகச் சிறிய பகுதியினுள் செறிவடைந்துள்ளன. அப்பகுதியே கரு ஆகும்.

இலத்திரன்கள் கருவிற்கு வெளியே, கோள்கள் சூரியனைச் சுற்றிப் பயணிப்பது போல் வட்ட ஒழுங்குகளில் (ஓடுகளில்) பயணிக்கின்றன.

3. தற்கால (நவீன) அணு மாதிரியுரு:

அணுவின் கருவானது நேரேற்றமுடைய புரோத்தன்களாலும் நடுநிலையான நியூத்திரன்களாலும் ஆனது.

இலத்திரன்கள் அவை கொண்டுள்ள சக்திக்கேற்ப கருவைச் சுற்றி குறித்த தூரங்களிலுள்ள முப்பரிமான சக்தி மட்டங்களில் (ஓடுகளில்) சுற்றி வருகின்றன.

சமதானிகள்

ஒரே அணுவெண்ணையும் வேறுபட்ட திணிவெண்களையும் கொண்ட ஒரே மூலகத்தின் அணுக்கள் சமதானிகள் எனப்படும்.

சமதானி அணுக்களிடையே திணிவெண் வேறுபடுவதற்குக் காரணம் நியூத்திரன்களின் எண்ணிக்கை வேறுபடுவதாகும்.

வினா 2. குளோரின் மூலகத்தின் A,B ஆகிய இரு சமதானிகளின் குறியீடு ${}^{35}_{17}Cl$ ${}^{37}_{17}Cl$ ஆகும். இவை பற்றிய பின்வரும் தகவல்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமதானி அணு	அணுவெண்	திணிவெண்	இலத்திரன்கள்	புரோத்தன்கள்	நியூத்திரன்கள்
A	....	....	....	....	....
B	....	....	....	....	....

வினா3. காபன், ஒட்சிசன், சோடியம் என்பவற்றின் குறியீடுகள் முறையே $^{12}_{6}C$ $^{16}_{8}O$ $^{23}_{11}Na$ ஆகும்.

i. இவற்றின் இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.

$^{12}_{6}C \Rightarrow$............ $^{16}_{8}O \Rightarrow$.......... $^{23}_{11}Na \Rightarrow$ ....

ii. காபன், ஒட்சிசன் அணுக்கள் இணைந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரத்தையும் இதன் பிணைப்பு வகையையும் எழுதுக. இங்கு உருவாகும் பிணைப்பை குற்று (.), புள்ளடி (x) வடிவில் அடைப்பினுள் வரைந்து காட்டுக.

சூத்திரம்: .... பிணைப்பு வகை:............ பிணைப்பு: [ ]

iii. ஒட்சிசன்,சோடியம் என்பன தாக்கமுற்று உருவாகும் சேர்வையின் சூத்திரத்தை பிணைப்பு வகையையும் எழுதுக.

சூத்திரம்: .... பிணைப்பு வகை:...

iv. மேற்படி காபன், ஒட்சிசன் இணைந்து உருவாகும் சேர்வைக்கும் ஒட்சிசன், சோடியம் என்பன இணைந்து உருவாகும் சேர்வைக்கும் இடையிலான நான்கு வேறுபாடுகளை இவற்றின் பிணைப்பினைக் கருதி எழுதுக.

காபன், ஒட்சிசன் உருவாகும் சேர்வை	ஒட்சிசன், சோடியம் என்பன உருவாகும் சேர்வை
1.	1. ....
2.	2. ....
3.	3. ....
4.	4. ....

மூல் (Mole)

- இரசாயனவியலில் பதார்த்தங்களை அளவிற்கான நியம அலகு மூல் ஆகும். இதன் அலகு: mol
- *12g* $^{12}_{6}C$ சமதானியிலுள்ள அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமனான அணுக்கள்/ மூலக்கூறுகள்/ அயன்களைக் கொண்டுள்ள பதார்த்தத்தின் அளவு மூல் எனப்படும்.
- **மூலகங்களுக்கு:** அவற்றின் சாரணுத் திணிவின் கிராம் அளவு 1மூல் ஆகும். (அணு மூல்)

  Eg. காபன் (C) இற்கு *12g = 1* மூல், கல்சியம் (Ca) இற்கு *40g* = மூல், சோடியம் (Na) இற்கு *23g = 1*மூல்

  சேர்வை/ மூலக்கூறுகளுக்கு: அவற்றின் சார் மூலக்கூற்றுத்திணிவின் கிராம் அளவு 1மூல் ஆகும். (மூலக்கூற்று மூல்)

  Eg: Co_2 இற்கு *44g = 1*மூல், Cl_2 இற்கு *71g* = 1 மூல்

மூலர்த்திணிவு

- *1* மூல் பதார்த்தத்தின் திணிவு மூலர்த்திணிவு எனப்படும். இதன் அலகு:$gmol^{-1}$

  உ+ம். சோடியம் (Na) இன் மூலர்த்திணிவு = *23* $gmol^{-1}$

  சோடியம் குளோரைட்டின் (NaCl) மூலர்த் திணிவு = *58.5*$gmol^{-1}$

வினா4. கீழ்வரும் வினாக்களில் இடைவெளிக்கு வரவேண்டிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

i. $^{31}_{15}P$ எனும் குறியீட்டைக் கொண்ட மூலக அணுவிலுள்ள ஏற்றமற்ற துணிக்கைகளின் எண்ணிக்கை .... ஆகும்.

ii. சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியம அணுத்திணிவு அலகாகக் கருதப்படும் ....ஆகும்.

iii. அவகாதரோ மாறிலியின் எண் பெறுமானம் .... ஆகும்.

iv. ஐதரசன் காபனேற்றின் குறியீடு ...., அதன் வலுவளவு .... ஆகும்.

v. அயடீன் பளிங்கு ஒரு .... சாலகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னோட்டத்தின் விளைவுகள்

- இலங்கையில் வீடுகளுக்கு வழங்கப்படும் மின் 230v வோல்ற்றளவும் 50Hz அதிர் வெண்ணும் கொண்ட ஆடலோட்டமாகும்.
- வீடுகளுக்கு உயிர் (L), நொதுமல் (N) எனும் கம்பிகளினூடாக வரும் மின்னோட்டம் பின்வருமாறு பல்வேறு துணைச் சாதனங்களினூடாக செல்லும்:

மின் வழங்கல் → சேவை உருகி → மின்மானி → தலைமை ஆளி → தடக்கு ஆளி → பரம்பற் பெட்டி

வினா1. பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் துணைச் சாதனத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

i. குறித்த அளவைவிட உயர் ஓட்டம் பாயும் போது மின்னோட்டத்தைத் துண்டிப்பது: ....

ii. குறுஞ் சுற்றுக்களால் ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கப் பயன்படுவது. ....

iii. பரம்பற்பெட்டியில் உருகிகளுக்கு பதிலாகப் பயன்படுவது ....

- பல்வேறு தேவைகளுக்குமான உலோகங்கள்

பயன்பாடு	உலோகம்	கொண்டுள்ள இயல்புகள்
மின்னைக் கடத்தும் வடங்களில்	செப்பு, அலுமினியம்	தடைத்திறன் குறைவு, உருகுநிலை உயர்வு
உருகிக் கம்பிகளில்	ஈய வெள்ளீயம்	தடைத்திறன் குறைவு, உருகுநிலை குறைவு
வெப்பமாக்கும் சாதனம், மின்குமிழ்களில்	நிக்ரோம், தங்குதன்	தடைத்திறன் உயர்வு, உருகுநிலை உயர்வு

- உயர் தடைத்திறனுடைய மின் பாயும்போது இலத்திரன்களின் அதிர்வு காரணமாக வெப்பம் பிறப்பிக்கப்படுவது மின்னின் வெப்ப விளைவு ஆகும்.

வெப்ப விளைவு (H) இற்கான சமன்பாடுகள்: $H = VIt$ $H = I^2Rt$ $H = \frac{V^2}{R}t$

வினா 2. மின்னின் இரசாயன விளைவாகிய மின்பகுப்பை அறியும் பொருட்டு சிறிதளவு அமிலம் துமிக்கப்பட்ட நீரை மின்பகுப்புச் செய்ய அமைத்த உபகரணத் தொகுதியை அருகிலுள்ள படம் காட்டுகின்றது.



i. இம்மின்பகுப்புக் கருவி எப்பெயரால் அழைக்கப்படும்?

ii. இங்கு அனோட்டு, கதோட்டில் நிகழும் தாக்கத்திற்கான சமப்படுத்திய இரசாயன சமன்பாட்டை எழுதுக.

அனோட்டில்:......... கதோட்டில்:............

iii. இங்கு நீருடன் சிறிதளவு சல்பூரிக்கமிலம் சேர்க்கப்பட்டதன் காரணம் யாது?

iv. இங்கு உருவாகும் O_2,H_2 வாயுக்களுக்கிடையிலான விகிதம் யாது?

v. மின்பகுப்பின் வேறு பயன்கள் மூன்றை எழுதுக.

இலத்திரனியல் கூறுகளும் அவற்றின் பயன்களும்

- பல்வேறு இலத்திரனியல் சாதனங்களினதும் உற்பத்தியில் குறைகடத்திகள் பயன்படுகின்றன. இவை ஆவர்த்தன அட்டவணையில் iiiம், ivம், vம் கூட்டங்களில் காணப்படுகின்றன.

iiiம் கூட்டம்: B,Ga   ivம் கூட்டம்: Si, Ge   vம்கூட்டம்: P,As

- குறை கடத்திகளைப் பொருத்தமாக கலப்படம் செய்து (மாசுபடுத்தல்) மின் கடத்தாறு கூடியதாக அவற்றை மாற்ற முடியும். இது 2 வகைப்படும்.

i. pவகைக் குறைகடத்தி: iii+ivம் கட்ட குறைகடத்திகள் eg. B+Si

ii. nவகைக் குறைகடத்தி: iv+vம் கூட்ட குறைகடத்திகள் eg. Ge+As

(26ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்- ஆளுமை

மஸ்ஹர் ஸகரிய்யா

கலாநிதி வஹ்பா முஸ்தபா ஸுஹைலி

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாலைவனத்து சமூகத்திற்கு வழிகாட்ட வந்த மார்க்கமான இஸ்லாம், நவீன விஞ்ஞான தொழிநுட்ப உலகிற்கு எங்ஙனம் வழிகாட்ட முடியும் என்று காலங் காலமாக முன்வைக்கப்படும் கேள்விக்கு பொருத்தமான பதில்களை முன்வைத்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தி வருகின்றது இஸ்லாம். அதனைத் தூய வடிவில் பாதுகாத்து எதிர்வரும் சந்ததிக்கு ஒப்படைப்பதற்காக வரலாறு நெடுகிலும் அல்லாஹ் அறிஞர்களை உருவாக்கி வந்துள்ளான்.

இந்த வகையில், இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளிலும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் தனது பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் உலகிற்கு பெரும் பங்களிப்பு வழங்கி வரும் ஒருவரே கலாநிதி வஹ்பா முஸ்தபா ஸுஹைலி. 1932ல் சிரியாவில் டமஸ்கஸ் எனும் நகரில் 'தீர் அதிய்யா' என்ற கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த கலாநிதி வஹ்பா ஸுஹைலியின் அறிவுத்துறைப் பங்களிப்புகளை அறியும் எவரும் வியப்பின் உச்சத்திற்கே சென்று விடுவர். தினந்தோறும் பதினாறு மணித்தியாலங்களை அறிவுப் பணிக்கு செலவிட்டுவரும் கலாநிதி அவர்கள் தனது 80 வருட வாழ்க்கையில் 160 இற்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.

ஆரம்பக் கல்வியை தனது கிராமத்தில் பயின்ற வஹ்பா உயர் கல்வியை டமஸ்கஸ் பல்கலைக்கழகத்தில் ஆறு வருடம் பயின்று 1952 இல் பட்டம் பெற்று வெளியேறினார். பின்னர் எகிப்தில் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் அரபு மொழி கற்கை பீடத்தில் 4 வருடங்கள் கற்று அரபு கற்பித்தலில் புலமை பெற்றார். இதே காலப் பிரிவில் அய்ன் ஷம்ஸ் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் இளமானிப் பட்டம் பெற்றார். 1959இல் கெய்ரோ பல்கலைக்கழக சட்ட பீடத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

1963இல் "The Influences of War on Islamic Jurisprudence: A comparative study including the eight schools of Islamic law and secular international law" என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். அவர் மாணவராக இருந்த காலப் பிரிவில் ஆசிரியர்கள் அனைவரினதும் நன்மதிப்பையும் மாணவர்களில் எவராலும் அவரை மிகைத்துவிட முடியாத திறமையையும் பெற்றிருந்தார்.

1963 தொடக்கம் 1975 வரையிலான காலப் பிரிவில் டமஸ்கஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் சட்டத்துறைப் பீடாதிபதியாகவும் கடமையாற்றினார். 1972 முதல் 1974 வரையான காலப் பிரிவில் லிபியாவின் பெங்காஸி பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1984 முதல் 1989 வரையான காலப் பிரிவில் ஐக்கிய அரபு இராச்சிய பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றினார். சூடானின் கார்ட்டூம் மற்றும் ரியாத் பல்கலைக்கழகங்களிலும் கலாநிதி அவர்கள் கடமையாற்றியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக் காலப் பிரிவில் கலாநிதி அவர்கள் எழுபதுக்கும் மேற்பட்ட முதுமானி, கலாநிதி பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளின் பிரதான கண்காணிப்பாளராக இருந்துள்ளார். இது தவிர எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டபோது அதன் பரீட்சகர் குழுவில் அங்கம் வகித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி வஹ்பா ஸுஹைலி இஸ்லாமிய உலகின் மிகப் பெரும் அழைப்பாளர்களுள் ஒருவர். சிரியாவின் டமஸ்கஸ் பல்கலைக்கழகத்தில் அவரின் கண்காணிப்பின் கீழ் கல்வி பயின்று 40 வகுப்புக்கள் வெளியாகியுள்ளன. இது தவிர லிபியா, சூடான், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளிலும் உயர் கல்வி பயின்ற எண்ணற்ற அழைப்பாளர்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் பலர் இன்று பல பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாகவும் பாடசாலை ஆசிரியர்களாகவும் உலகப் புகழ் பெற்ற அழைப்பாளர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இன்று கிழக்கிலும் ஐரோப்பிய உலகிலும் உயர் கல்வி பயிலும் பல்லாயிரக்கணக்கான பல்கலைக் கழக மாணவர்களது பல பாட நூல்கள் கலாநிதி அவர்களால் எழுதப்பட்டதாகும். குறிப்பாக நவீன உலகில் இஸ்லாமிய சட்டம், இஸ்லாமிய சட்ட அடிப்படைகள் பற்றிய அறிவியற்கலை, அல்குர் ஆன் விரிவுரை போன்ற துறைகளில் கலாநிதி ஸுஹைலியின் பங்களிப்பு மெச்சத்தக்கது.

கலாநிதியின் அல்குர்ஆன் விரிவுரைக்கான பங்களிப்பாக, 17 பாகங்களைக் கொண்ட தப்ஸீர் முனீரைக் குறிப்பிடலாம். 'தப்ஸீர் முனீர்' ஒரு கலைக்களஞ்சிய மாக இருப்பதை அதனை வாசிக் கின்ற எவரும் புரிந்து கொள்வர்.

கலாநிதி வஹ்பா ஸுஹைலி இஸ்லாமிய உலகின் மிகப் பெரும் அழைப்பாளர்களுள் ஒருவர். சிரியாவின் டமஸ்கஸ் பல்கலைக்கழகத்தில் அவரின் கண்காணிப்பின் கீழ் கல்வி பயின்று 40 வகுப்புக்கள் வெளியாகியுள்ளன. இது தவிர லிபியா, சூடான், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளிலும் உயர் கல்வி பயின்ற எண்ணற்ற அழைப்பாளர்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் பலர் இன்று பல பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாகவும் பாடசாலை ஆசிரியர்களாகவும் உலகப் புகழ் பெற்ற அழைப்பாளர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கலாநிதி வஹ்பா ஸுஹைலி எழுதிய Islamic Jurisprudence and its proof (பிக்ஹுல் இஸ்லாமி வ அதில்லதுஹு) பிக்ஹுக்கான ஒரு கலைக் களஞ்சியமாக விளங்குகின்றது. இஸ்லாமிய சட்டப் பிரச்சினைகள் அனைத்தும் முக்கிய நான்கு மத்ஹபுகளின் ஒளியில் ஆய்வு செய்யப்பட்டு மிகப் பொருத்தமான கருத்தை கண்டு கொள்ளும் வகையில் இந்நூல் அமைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். 8 பாகங்களைக் கொண்ட இத்தொகுப்பின் ஒவ்வொரு பாகமும் சுமார் ஆயிரம் பக்கங்களை உள்ளடக்கியுள்ளது.

இவர் 160இற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். சர்வதேச இஸ்லாமிய சட்டம், மனித உரிமைகள், ஜனநாயகம், சுதந்திரம், மத ஒப்பீட்டாய்வு போன்ற பல துறைகளில் புத்தகங்களை எழுதி இஸ்லாம் எக்காலத்திற்கும் பொருத்தமான மார்க்கம் என்று நிரூபிக்கும் திறன் அவரது தனிப்பெரும் ஆளுமையாகும். அவரால் எழுதப்பட்ட பல புத்தகங்கள் இஸ்லாமிய பல்கலைக்கழகங்களிலும் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களிலும் பிரதான உசாத்துணைகளாகக் கொள்ளப்படுகின்றன. பிரெஞ்ச், துருக்கி, உர்து , மலே, பாரசீகம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் இவரின் பல புத்தகங்கள் பெயர்க்கப்பட்டுள்ளன.

உலகில் காணப்படும் பிரதான நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றின் பிரதான ஆலோசகர்களுள் ஒருவராக இவர் திகழ்கின்றார்.

சிரியாவின் தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் அதிக உரைகளை நிகழ்த்தி மக்களால் விரும்பப்படும் ஓர் ஆளுமையாகப் பிரகாசிக்கின்றார். அல்குர்ஆனும் வாழ்வும், அல்குர்ஆனிய கலைகள் என்பன போன்ற இவர் நடத்தும் நிகழ்ச்சிகளை மக்கள் விருப்பத்துடன் கேட்டும் பார்த்தும் வருகின்றனர். மக்கா, ஜித்தா, இந்தியா, அமெரிக்கா, சூடான் போன்ற பல நாடுகளில் காணப்படும் இஸ்லாமிய சட்ட அமைப்புக்களின் பிரதான ஆலோசகராக செயற்பட்டு வருகின்றார்.

2008ஆம் ஆண்டில் மலேசிய அரசு உலகின் மிகச் சிறந்த இஸ்லாமிய ஆளுமைகளுக்கு வழங்கிய விருதில் கலாநிதி வஹ்பா ஸுஹைலியும் இணைத்துக் கொள்ளப்பட்டார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
LIBRARY JAFFNA

மே 01 உலக தொழிலாளர் தினம்

● ஏ.எச். றக்கீப்

உழைக்கும் மக்கள் பற்றியும் அவர்களது உரிமைகள், கடமைகள் பற்றியும் இஸ்லாம் தெளிவாகக் கூறியுள்ளது. மனித உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட சமூகத்தில் மக்களின் உரிமைகளுக்காக 1400 வருடங்களுக்கு முன்னரே குரல் கொடுத்தது இஸ்லாம்.

ஐரோப்பிய உலகு, 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட மாபெரும் புரட்சி மூலமே தொழிலாளர் சமூகத்தின் உரிமைகளைப் பெற்றெடுத்தது. தொழிலாளர் உரிமைகள் வென்றெடுக்கப்பட்ட இம் மே தினம் வரலாறானது. ஒவ்வொன்றின் சிறப்பை எடுத்தியம்பவும் ஒவ்வொரு தினம் கொண்டாடப்படுவது போல உழைக்கும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்த தினமாக இது அனுஷ்டிக்கப்படுகிறது.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் 1955இல் ஏ.ஈ. குணசிங்க தலைமையில் மே தினக் கொண்டாட்டம் கொழும்பில் நடைபெற்றது. இதன் பின் இடதுசாரிக் கட்சிகள், கம்யூனிஸ்ட் கட்சிகள் முன்னெடுத்த எழுச்சி நடவடிக்கைகளின் பலனாக எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின் கீழ் 1956இல் தேசிய சம்பள விடுமுறை தினமாக மே தினத்தைக் கொண்டாடியது. இவ்வருடம் இலங்கைக்கு 56வது மே தினமாகும்.

இம் மே தினக் கொண்டாட்டங்கள் ஒவ்வொரு நாட்டிலும் வித்தியாசமான முறைகளிலும் வெவ்வேறு தினங்களிலும் நடைபெறுகின்றன. குறிப்பாக சால்வேனியா, சேர்பியா, உக்ரேன் போன்ற நாடுகளில் மே 1ம், 2ம் திகதிகள் விடுமுறை தினங்களாகக் கொண்டாடப்படுகின்றன. அயர்லாந்து, டொமினிக்கா, டொமினிக் குடியரசு, குயின்ஸ்லாந்து போன்ற நாடுகள் மே மாதத்தின் முதல் திங்கள் கிழமையை தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கின்றனர். அல்பேனியாவில் மே தின ஊர்வலத்தின்போது தொழிலாளர் வர்க்கத்திற்கு தேவையான உரிமைகளை சுலோகங்களாக எழுதி ஊர்வலம் செல்வர். இலங்கையில் அரசியல் கட்சிகள் மே தினத்தில் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றை நடத்துகின்றன.

தற்காலத்தில் தொழிலாளர்களின் நலன் கருதி பல்வேறு அமைப்புக்கள் உலகில் தோற்றம் பெற்றுள்ளன.

- 1986இல் சர்வதேச தொழிலாளர் உரிமைகள் அமைப்பு (International Labour Organization)
- 1919 இல் சர்வதேச தொழிலாளர் சபை (International Labour Rights Organization)
- 1999இல் மத்திய தொழிலாளர் நிறுவனம் (Fair Labour Association)
- 1951இல் சர்வதேச சோஷலிச அமைப்பு (Socialist International)

இவை சர்வதேச மட்டத்தில் செயற்பட்டுக் கொண்டு தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்து வருகின்றன.

எனவே, நாமும் தொழிலாளர்களின் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பளித்து அவர்களை என்றும் கௌரவப்படுத்துவோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AFAQ

கலைக்களஞ்சியம்

உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்க...

கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்றால் என்னவென்று தெரிந்து வைத்திருப்பீர்கள். ஆங்கிலக் கலைக்களஞ்சியங்களை நாம் வலைத்தளங்களினூடாகத் தாராளமாகப் பார்வையிட முடிகிறது. ஆனால், தமிழில் புதிய தகவல்களுடன் சிறுவர்களுக்காக வெளிவந்த தரமான கலைக்களஞ்சியங்கள் எதுவுமில்லையெனலாம். மிக நீண்ட காலத்துக்கு முன், தமிழ் முன்னேற்றக் கழகத்தினால் வெளியிடப்பட்ட குழந்தைகள் கலைக்களஞ்சியம் மட்டுமே தமிழில் பரவலாகத் தெரிந்த சிறுவர் கலைக்களஞ்சியமாகும்.

என்றாலும், உங்கள் எல்லோர் கரங்களிலும் கலைக்களஞ்சியம் தவழும் காலம் இப்போது உதயமாகியுள்ளது, அல்ஹம்துலில்லாஹ். Insight நிறுவனம் வெளியிட்டுள்ள AFAQ கலைக்களஞ்சியம், இலங்கையில் வெளிவரும் முதலாவது சிறுவர்களுக்கான மாதாந்த கலைக்களஞ்சியமாகும்.

இதன் முதலாவது இதழ் யானைகள் பற்றியதாக வெளிவந்திருக்கின்றது. உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்க எனும் வரிகளுடன், அட்டைப்படம் கண்ணைக் கவரும் விதமாக யானைகளின் படங்களைத் தாங்கி வந்துள்ளது. இதழ் முழுவதும் இடம்பெறும் படங்கள், கடும் நிறங்களின்றி, இதமான வர்ணங்களில் அமைந்துள்ளமை இதழுக்கு மேலும் மெருகூட்டுகிறது.

யானைகள் பற்றிப் பதினைந்துக்கும் மேற்பட்ட தலைப்புகளில் வெளிவந்துள்ள பல்வேறுபட்ட தகவல்கள் சுவையாக உள்ளன. யானைகளின் பழக்கவழக்கங்களின் ஊடாக சிறுவர்களுக்கான முன்மாதிரிகள் எடுத்துக்காட்டப்படுவதும் யானைகள் பற்றிய அல்குர்ஆன் அத்தியாயமான ஸூரா அல்பீல் இடம்பெற்றிருப்பதும் AFAQ கலைக்களஞ்சியத்தின் சிறப்பம்சமாகும். செய்திகள் நேரம் பகுதியில் யானைகள் உலகின் சர்வதேச செய்திகள் இடம்பெற்றுள்ளன. யானைகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கான வலைத்தளங்களின் முகவரிகளும் தொழுகைகளை மதிப்பீடு

செய்வதற்கான வழிகாட்டலுடன் அட்டவணையும் இடம்பெற்றிருப்பது விஷேட அம்சங்களாகும். சகோதரி ரும்மானின் தமிழாக்கம் அருமையாக உள்ளது. சிறுவர்களை வாசிக்கத் தூண்டும் தரமான மொழிநடையும் சிறப்பான அச்சுப் பதிப்பும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டும்.

பின் அட்டையில் ஆபிரிக்க, ஆசிய யானைகளின் ஒப்பீடு இடம் பெறுகின்றது. அத்துடன், யானைகள் பற்றிய புதிர், சொற்களஞ்சியம் என்பவற்றோடு 'ஆபாக்' மாமாவின் தம்பி தங்கைகளுக்கான செய்தியும் இடம்பெற்றுள்ளது. AFAQ கலைக்களஞ்சியத்தின் அடுத்த இதழ் துருக்கி பற்றியும் மூன்றாம் இதழ் புகையிரதம் பற்றியும் நான்காம் இதழ் ஜாபிர் இப்னு ஹய்யான் பற்றியும் இன்ஷாஅல்லாஹ் வெளிவர இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான தகவலையும் கடைசிப் பக்கம் சொல்கிறது.

AFAQ கலைக்களஞ்சியம் ஆங்கிலம், அரபு, உருது, ஜேர்மனி, நோர்வே ஆகிய மொழிகளிலும் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது

மொத்தம் எட்டுப் பக்கங்களுடன் ஐம்பது ரூபாய் விலையில் வெளிவந்திருக்கும் இக்கலைக்களஞ்சியம், எல்லா வகையிலும் மிகச் சிறப்பானதாக அமைந்துள்ளது. சிறுவர்களாகிய உங்களுக்காக வெளிவரத் தொடங்கியிருக்கும் இந்த மாதாந்த கலைக்களஞ்சியம் உங்கள் அறிவுக்கு விருந்தளித்து, உங்களை வளப்படுத்தப் பொருத்தமானதோர் ஊடகம் எனத் துணிந்து கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷஹாதத் எனும் வீர மரணத்தை நேசித்த

இஸ்மத் அலி

அல்பர்ரா பின் மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு)

உம்முசலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு இரண்டு புதல்வர்கள். அதில் ஒருவர் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். அவரை நபிகளாருக்கு பணிவிடை செய்வதற்காக சிறுவயதிலேயே உவந்தளித்தாள் அத்தாய். தனது அடுத்த மகனான பர்ராவை இஸ்லாத்திற்காக அர்ப்பணம் செய்யும் சிந்தனை யோடும் சுவனத்தை நேசிக்கும் உணர்வோடும் வளர்த்து வந்தார்.

சிறுவயது முதலே பர்ரா இஸ்லாத்திற்காக தன் உயிரைத் தியாகம் செய்து தான் ஷஹீதாக வேண் டும் என்று அவாக் கொண்டிருந்தார். எனவே, அனைத்துப் போராட்டங்களிலும் தனது உயிர் பற்றிய அச்சமின்றி முன்நின்று எதிரிகளோடு போராடினார்.

யமாமா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரமது. நபிகளாருக்குப் பின் தானே நபி எனப் பொய்யாக வாதிட்ட முஸைலமா என்பவனுக்கு எதிராக காலித் பின் வலீத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தலைமையில் முஸ்லிம் படையணி போராடிக் கொண்டிருந்தது. வீர மரணத்தை எய்து சுவனத்தை அடைந்திட வேண்டும் என்ற அவாவோடு பர்ரா முன் வரிசையில் நின்று போராடிக் கொண்டிருந்தார்.

தளபதி காலித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பர்ராவை அழைத்து சோர்வடையும் முஸ்லிம்களை உற்சாகப்படுத்துமாறு கூற, அழகிய குரல் வளம் கொண்ட பர்ரா,

"மதீனாவாசிகளே! இந்த நாளில் உங்களுக்கு மதீனாவைப் பற்றி எண்ணுவதற்கு நேரமில்லை. நீங்கள் சுவனத்தையும் அல்லாஹ்வையும் நினைத்துக் கொள்ளுங்கள்" என்று உற்சாகமூட் டிக் கொண்டே எதிரணியை துவம்சம் செய்கின்றார்.

முஸ்லிம் படையணியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத முஸைலமாவின் படையினர் ஒரு தோட்டத்திற்குள் அடைக்கலம் தேடி ஒளிந்து கொள்கிறார்கள். ஒளிந்திருந்து அவர்கள் நடத்தும் தாக்குதலில் முஸ்லிம்கள் கொல்லப்படு வதைக் கண்ட பர்ரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்,

"மக்களே! என்னைத் தூக்கி அவர்களுக்கு மத்தியில் வீசுங்கள். அவர்கள் என்னைக் கொல்ல முயற்சிக்கையில் நீங்கள் தோட்டத்திற்குள் நுழை யுங்கள்" என்று கூறுகிறார்.

தனது உயிரைக் கொடுத்து அந்தத் தோட்டத்தின் கதவுகள் திறக்கப்படுமாயின் அதே சந்தர்ப்பத்தில் தனக்காக சுவனத்தின் கதவுகள் திறக்கப்படும் என்பது அவரது எண்ணமாக இருந்தது. என்றா லும் அவரது கோரிக்கையை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, அவராகவே துணிந்து முன் செல்கின்றார். எதிரிகளின் பலமான தாக்குதலுக்கு மத்தியில் அத்தோட்டத்தின் கதவுகளை முஸ்லிம் படையணிக்காகத் திறந்து விடுகின்றார். யுத்தத்தின் முடிவில் சுமார் எண்பது வெட்டுக் காயங்களோடு தான் யாசித்த வீர மரணம் கிடைக்கவில்லையே! என்ற கவலை யோடு திரும்புகின்றார். ■

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் I **நேரம் 45 நிமிடம்**

கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான எதிர்ப்பதத்தை தெரிந்து கோடிடுக.

1. கூட்டம் பெரும் ஆரவாரத்துடன் ஆரம்ப மாகியது.
   i. சப்தத்துடன் ii. கூக்குரலுடன் iii. அமைதியுடன்
2. நண்பர்கள் அனைவரும் நாகரிகமாக நடந்து கொண்டனர்.
   i. அநாகரிகமாக ii. அவநாகரிகமாக iii. நேர்த்தியாக
3. யாத்திரிகர்கள் குன்றுகளில் நின்றனர்.
   i. பள்ளங்களில் ii. குழிகளில் iii. மேடுகளில்
4. விஞ்ஞான பீட மாணவர்கள் குவிவாடிகளைப் பயன்படுத்தினர்.
   i. தளவாடி ii. கண்ணாடி iii. குழிவாடி
5. விளையாட்டு வீரர்களுக்கு காற்று சாதகமாக அமைந்தது.
   i. பாதகமாக ii. கவனமாக iii. உறுதியாக

பின்வரும் பந்தியை வாசித்து கீழ்காணும் வினாக்களுக்கு விடை தருக.

மகனே அங்கே போகாதே. நான் சொல்வதைக் கேள். அலைகள் பலமாக எழும்புகின்றன. தாய் சொல்லைத் தட்டாதே. நீ கேட்ட பாவையை வாங்கித் தருகிறேன். போகாதே... போகாதே...இதோ மாமா வருகிறார். இங்கே ஓடி வந்துவிடு. அண்ணாவும் தங்கையும் உன்னைத் தேடுகிறார்கள். அவர்களோடு சேர்ந்து விளையாடலாம் ஓடிவா.

6. இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட இடம்.
   i. சந்தை ii. ஆறு iii. கடல்
7. மகனை அழைப்பவர்.
   i. மாமா ii. தந்தை iii. அன்னை
8. அடம்பிடித்த பிள்ளை குடும்பத்தில்
   i. இரண்டாவது ii. மூத்தவன் iii. மூன்றாவது
9. "மகனே அங்கே போகாதே" என்ற வாக்கியம்.
   i. வினா வாக்கியம் ii. ஏவல் வாக்கியம் iii. கூட்டு வாக்கியம்
10. அவர்களோடு என்பது
   i. தன்மை ii. முன்னிலை iii. படர்க்கை

பின்வரும் படங்களுள் இரண்டு ஒரே கருத்தைத் தரக்கூடியன. ஒன்று மட்டும் வித்தியாசமானது. அதன் கீழ் கோடிடுக.

11.

12.

13.

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

14. கலுலேல்ல .... 15. ககுல ....

பின்வரும் எண் கோலத்தில் அடுத்து வரும் எண்களைத் தருக.

16. 17, 23, 29, ... 17. 93, 89, ..., 81
18. 73, 63, 73, ... 19. 29, 37, ..., 53
20. 9058ஐ விரித்து எழுதுக.
21. 4l 500ml உள்ள குளிர்பான போத்தலில் உள்ள பானங்களை 75 ml அளவு கொள்ளக் கூடிய எத்தனை குளிர்பான போத்தல்களில் ஊற்றலாம்?
   i. 8 ii. 6 iii. 10
22. இவ்வுருவில் எத்தனை செங்கோண முக்கோணங்கள் காணப்படுகின்றன?
   
   i. 3 ii. 5 iii. 7

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

23. சவர்க்காரம் எந்த நீரில் நுரைப்பதில்லை?
   i. மழை நீர் ii. ஆற்று நீர் iii. கடல் நீர்

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பின்வரும் பூக்களிடையே மிகவும் வாசனை யுடைய பூ எது?
i. குண்டு மல்லிகை ii. அந்தூரியம்
iii. கடதாசிப் பூ

25. இலங்கையில் எந்தவித நதியும் பாயாத மாவட்டம் எது?
i. யாழ்ப்பாண மாவட்டம் ii. கொழும்பு மாவட்டம் iii. களுத்துறை மாவட்டம்

26. சக்கரை சாதம் செய்வதற்குப் பயன்படுத்தும் பருப்பு வகை எது?
i. உழுந்து ii. கடலை iii. பாசிப்பயறு

27. பாடசாலை விழா ஒன்றின்போது ஏற்றப்படும் கொடிகளில் எக்கொடி மிக உயரத்தில் பறக்கவிடப்படும்?
i. பாடசாலைக் கொடி ii. தேசியக் கொடி
iii. பௌத்த கொடி

28. எந்தவிதமான உபகரணமும் இல்லாது விளையாடும் கிராமிய விளையாட்டு எது?
i. கிட்டிப்புள் ii. எல்லே iii. கபடி

29. அரச இலச்சினையில் காணப்படாத அம்சம் எது?
i. நிறை குடம் ii. தர்மச் சக்கரம்
iii. அரச இலைகள்

30. மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரம்.
i. கொழும்பு ii. கதிர்காமம் iii. சிலாபம்

31. நிலாம் மாத சம்பளமாக ரூபா 4500 பெறுகிறான். இதில் 1/8 பங்கை சேமிப்பு செய்கிறான். மிகுதியாக இருக்கும் பணம் எவ்வளவு?
i. ரூபா 1200.00 ii. ரூபா 3600.00
iii. ரூபா 4200.00

32. 10 நிமிடங்களுக்கு 20கி.மீ. தூரம் செல்லும் வாகனம் ஒன்று (சீரான வேகத்தில்) 2 மணித்தியாலத்தில் எவ்வளவு தூரம் செல்லும்?
i. 240km ii. 240m iii. 360km

33. இவ்வுருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?



34. மில்லி கிராமில் அளக்க முடியாதது எது?
i. தங்கம் ii. அரிசி iii. வெள்ளி

வசனங்களை அவதானித்து சரியான விடையின் குறியீட்டினை புள்ளிக்கோட்டில் எழுதுக.

35. தன்னைப் பற்றி தானே கூறுவது.
i. வரலாறு ii. சுயசரிதம் iii. இதிகாசம்

36. புதிதாக பாடசாலைக்கு வந்த அதிபர் உரை நிகழ்த்தினார். இவரது உரை
i. காலைக் கூட்ட உரை ii. கன்னி உரை
iii. அணிந்துரை

37. குயவன் களிமண்ணைப் பதப்படுத்தினான். குயவன் என்பது
i. மட்பாண்டங்கள் செய்பவன்
ii. ஆடு மேய்ப்பவன்
iii. சட்டி, பானை செய்பவன்

38. மா மரங்கள் பூத்துக் காய்த்தன என்பதில் மா மரம்
i. பலவின்பால் ii. ஒன்றன்பால் iii. பலர்பால்

39. இளங்கன்று .... என்பதை முடிக்க பொருத்தமான சொல்.
i. ஓடித்திரியும் ii. புல் மேயும் iii. பயமறியாது

பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.

40. Buildings .... 41. Room ....

நவீத் சந்திரனின் வடிவம் தொடர்பாக அவதானித்த உருவப் படங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.



1 2 3 4 5

42. நவீத் 2012.3.15ம் திகதி பூரண சந்திரனைக் கண்டான். அன்று அவன் கண்ட சந்திரனின் இலக்கம் எது?

43. 2012.3.14ம் திகதி அவன் எவ்வாறான சந்திரனைக் கண்டிருப்பான். அதன் இலக்கத்தை எழுதுக.

44. 2012.3.29ம் திகதி அவன் கண்ட சந்திரனின் உருவைக் குறிக்கும் இலக்கத்தை எழுதுக.

சரி, பிழை என எழுதுக.

45. அச்சாறு போடுவதற்கு அலுமினியப் பாத்திரம் சிறந்ததொன்றாகும். ( )

46. கொடி தோடை பற்றிச் செல்லும் ஒரு கொடி வகையாகும். ( )

47. மலைப் பாம்பு மென்று உண்ணும் ஒரு பிராணியாகும். ( )

48. எலி எமக்கு உதவும் ஒரு பிராணியாகும். ( )

49. பாம்பு இரை மீட்டும் பிராணியாகும். ( )

50. தாமரை தனியே பூக்கும் ஒரு பூவாகும். ( )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் II **நேரம் 1 மணி 15 நிமிடம்**

அடைப்புக்குள் உள்ள இணைமொழிகளை பொருத்தமான புள்ளிக் கோடுகளில் எழுதுக.

(கள்ளங் கபடு, பட்டம் பதவி, கண்ணுங் கருத்தும், ஆடி அசைந்து, இன்ப துன்பம், வரவு செலவு, உண்டு உடுத்து, அல்லும் பகலும்)

1. பரீட்சையில் சித்தி அடைய ....மாக படிக்க வேண்டும்.
2. குழந்தைகள் .... அற்றவர்கள்.
3. செல்வந்தன் .... சுகபோக வாழ்க்கையை அனுபவித்தான்.
4. சிலர்.............களுக்காக அலைந்து திரிகின்றனர்.
5. வாழ்க்கையில் .... மாறிமாறி வருவது சகஜம்.

கீழ்வரும் பழமொழிகளுக்கு பொருத்தமான வசனங்களுக்குக் கோடிடுக.

6. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.
   i. அடுப்பங்கரையில் உள்ள பூனைகள் சூடு வாங்கும்.
   ii. ஒருவர் பெற்ற அனுபவத்தால் வர இருக்கும் ஆபத்தைத் தடுக்கலாம்.
   iii. சூடு பட்டால் ஆபத்து வரும்.
7. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
   i. உதவி புரிந்தவர்களை என்றென்றும் மறக்கலாகாது.
   ii. உப்பு தந்து உதவி புரிந்தவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும்.
   iii. உள்ளம் உள்ளவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

கீழ் காணப்படும் படங்களுக்கு பொருத்தமற்ற சொல்லைக் கீறிடுக.



8. ஊர்வன, சீறும், நட்பு 

9. வெற்றி, சோம்பல், போட்டி

10. சுத்தவாளி, குற்றவாளி, கைது



11. சூரியன், காலை, மாலை

12. பாதுகாப்பு, துவிச்சக்கர வண்டி, தலை

பின்வரும் சிங்கள வாக்கியங்களுக்கான கருத்தை எழுதுக.

13. லஸ்ஸன போலய........... 14. அம்மா கோ........

முதல் உருவுடன் இரண்டாம் உருவையும் இணைத்து வரைந்து சரியான விடையைக் கண்டு பிடிக்குக.

15.



i. ii. iii.

16.



i. ii. iii.

17.



i. ii. iii.

18.



i. ii. iii.

நான்கு பேரும் வாங்கிய பொருட்களின் விபரம்

கமலா	விமலா	ரவி	இக்பால்	விலைப்பட்டியல்
1500g மிளகாய்	500g பருப்பு	1250g அரிசி	750g மிளகாய்	2kg அரிசி - 180.00
1kg பருப்பு	1000g மிளகாய்	750g பருப்பு	3kg அரிசி	2kg பருப்பு - 240.00
1000g அரிசி	1500g அரிசி	500g மிளகாய்	1 kg பருப்பு	1kg மிளகாய் - 320.00

19.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. அட்டவணைக்கேற்ப மிகக் குறைவாக பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்? ....

அருகில் உள்ள இலங்கைப் படத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

21. C குறிக்கப்பட்ட மாகாணம் எது?



22. A குறிக்கப்பட்ட மாகாணம் எது?

23. B குறிக்கப்பட்ட மாகாணம் எது?

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

24. பல தெருக்கள் ஒன்றாக சேருமிடம் அல்லது சந்திக்குமிடம்.

i. சந்தி ii. வீதி iii. பிரதான வீதி

25. ஒருவன் பிறப்பிலிருந்து இறக்கும் வரையுள்ள காலப் பகுதி.

i. இறக்கும் காலம் ii. ஆயுட் காலம் iii. தலைமுறை

26. இலைகளைக் கொண்டிராத தாவரம் பின்வருவனவற்றுள் எது?

i. ரோசா ii. கற்றாளை iii. நாகதாளி

கீழ்வரும் வசனங்களில் பெயர் அடைமொழிகளைக் குறிப்பிடுக.

27. வண்ண மயில் அழகிய தோகையை விரித்தாடியது. ....

28. கருங்குயில் இனிய கீதம் இசைத்தது..................

பின்வரும் ஆங்கில வசனங்களுக்கான கருத்தை எழுதுக.

29. Very good boy ....

30. Sky is blue colour ....

31. கூடுதலாக மண்சரிவு ஏற்படும் பிரதேசம் எது?

i. மலை நாட்டுப் பிரதேசம்
ii. கடற்கரைப் பிரதேசம்
iii. ஆற்றங்கரைப் பிரதேசம்

32. பாடசாலையொன்றின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய அம்சங்கள் அல்லாதவை?

i. பாடசாலைக் கொடி, பாடசாலை கீதம்
ii. பாடசாலை கீதம், பாடசாலைச் சின்னம்
iii. பாடப் புத்தகம், கழுத்துப் பட்டி

33. புத்தளத்திருந்து காலை 8.00 மணிக்குப் புறப்பட்ட புகையிரதம் வழமைபோல் நண்பகல் 12.45 மணிக்கு கொழும்பை வந்தடையும். ஆனால், இன்று 30 நிமிடங்கள் தாமதமாகி கொழும்பை வந்தடைந்தது. வந்தடைந்த நேரத்தை 24 மணித்தியால கடிகார நேரத்தில் எழுதுக.

தோட்டமொன்றிலுள்ள தாவரம் பற்றிய தகவல்கள்

ஆணிவேர் கொண்டவை - 36	ஆணிவேர் இல்லாதவை - 63
சோளப் பயிர்கள் - 15	மா மரங்கள் - 20

34. இத் தகவலின்படி தோட்டத்திலுள்ள மொத்த மரங்கள் எத்தனை?

i. 134 ii. 99 iii. 63

35. இலங்கையின் அழகான நீர்வீழ்ச்சி எது?

i. துங்கிந்த ii. பம்பரகந்த iii. விக்டோரியா

36. இலங்கையில் உள்ள மிகப் பெரிய செயற்கை நீர்வீழ்ச்சி எது?

i. விக்டோரியா ii. பம்பரகந்த iii. துங்கிந்த

37. நீண்ட ஒட்டும் தன்மையான நாக்கைக் கொண்ட பிராணி எது?

i. முதலை ii. தவளை iii. பல்லி

38. இலங்கையில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு அபாயத்திற்கு உட்படும் மாவட்டம் எது?

i. கொழும்பு மாவட்டம்
ii. காலி மாவட்டம் iii. இரத்தினபுரி மாவட்டம்

எண்களை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

15	85
67	
68	48

39. மூன்றால் பிரிபடும் எண்களை மட்டும் எழுதுக.

40. ஐந்தாலும் மூன்றாலும் பிரிபடும் எண்களை மட்டும் எழுதுக.

41. இரண்டாலும் மூன்றாலும் பிரிபடும் எண்களை மட்டும் எழுதுக.

வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்களை கண்டு பிடித்து தரப்பட்ட சரியான விடையின் கீழ் கீறிடுக.

42. 5□□
457 -
027

i. 8, 4 ii. 6, 2 iii. 2, 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. 8 4 6   i. 7, 8   ii. 8, 7   iii. 8, 5

7 □□ -

0 6 8

சுருக்குக.

44. 909 + 99 - 199 = ...

45. 1099 + 99 - 999 = ...

கட்டத்தினுள் உள்ள சொல்லில் இடம்பெற்றுள்ள எழுத்துக்களை வைத்து வினாக்களுக்கு விடை தருக.

பல்கலைக்கழகம்

46. மானின் ஆண் ....

47. காய் என்பதன் எதிர்ச்சொல் ....

48. தாவரத்தின் ஒரு பகுதி ....

49. தந்தம் எனவும் கூறலாம் ....

பின்வரும் இலைகளுக்கு பொருத்தமான பெயரைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

(பலா இலை, பப்பாசி இலை, பூசணி இலை, கொடி தோடை இலை, ஈரப்பலா இலை)



50.

51.

52.

53.

54. மிகச் சிறிய பின்னத்தின் கீழ் கீறிடுக.

i. $\frac{1}{2}$ ii. $\frac{1}{8}$ iii. $\frac{1}{4}$

55. மிகப் பெரிய பின்னத்தின் கீழ் கீறிடுக.

i. $\frac{3}{4}$ ii. $\frac{1}{8}$ iii. $\frac{1}{4}$

ஒழுங்கமைக்குக.

56. தி-ம்-ம-ர-ந் ....

57. ன்-சா-ம்-ர-மி ....

58. கி-ம்-ல-அ ....

கடற்கரை என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம். எழுவாய் பயனிலைகள் ஒழுங்காக பேணப்பட்டிருத்தல் வேண்டும்.

இரண்டு உமர்களின் பணிவு

பாரசீக மன்னன் கிஸ்ராவிடமிருந்து அவரின் தூதுவர் கடிதமொன்றைக் கொடுப்பதற்காக கலீபா உமர் இப்னுல் கத்தாப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைத் தேடி மதீனாவுக்கு வந்தார். மதீனாவிலிருந்த ஒருவரிடம் கலீபாவின் மாளிகை எங்கே உள்ளது எனக் கேட்டார். கலீபா மாளிகையில் வசிப்பதில்லை என்பது தெரிவிக்கப்படவே ஆச்சரியத்தால் மேனி சிலிர்த்தார். கலீபா இருக்கும் இடத்தைத் தனக்குக் காட்டுமாறு அவரிடம் கேட்டுக் கொண்டார் அத்தூதுவர்.

கலீபாவைத் தேடி அவ்விருவரும் சென்று கொண்டிருக்கும்போது ஒரு மரத்தினடியில் உறங்கிக் கொண்டிருந்த கலீபாவை அவ்விருவரும் கண்டனர். உறங்கிக் கொண்டிருந்த அம் மனிதரை நெருங்கியதும், தூதரிடம் "இவர்தான் எங்கள் கலீபா அமீருல் முஃமினீன் உமரிப்னுல் கத்தாப் (ரழியல்லாஹு அன்ஹு)" எனக் கூறினார். தூதுவரின் ஆச்சரியத்திற்கு அளவேயில்லை.

ஒரு கலீபா, அனைவரினதும் தலைவன் மாளிகையிலல்லாமல் மரத்தடியில் உறங்குவதா என நினைத்து, "உமரே நீயே உன் மக்களுக்கு தீர்ப்பு அளிக்கிறாய்; நீதியும் செலுத்துகிறாய்; நிம்மதியாகவும் உறங்குகின்றாய்" என தனக்குள் கூறிக் கொண்டார்.

ஐந்தாம் கலீபா என வர்ணிக்கப்படும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் இல்லத்திற்கு விருந்தினரொருவர் வந்திருந்தார். இருவரும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டது. கலீபா எழுந்து சென்று அவ் விளக்கை சரி செய்து விட்டு மீண்டும் வந்து அமர்ந்தார். இதனை அவதானித்துக் கொண்டிருந்த அவ்விருந்தினர், "அமீருல் முஃமினீன் அவர்களே, நீங்கள் ஏன் எழுந்து சென்று அவ்விளக்கை சரி செய்தீர்கள்? என்னிடம் கூறி இருந்தால் நான் செய்திருப்பேனே அல்லது உங்கள் பணியாட்களிடம் கூறியிருந்தால் அவர்கள் செய்திருப்பார்களே!" என்றார். அதற்கு கலீபா "அன்பானவரே! நான் சாதாரன உமராகவே சென்றேன், சாதாரண உமராகவே வந்தேன், அமீருல் முஃமினாக அல்ல, அவ்வேலையைச் செய்வதை விட்டும் என்னை எவையும் தடுக்கவில்லை. அல்லாஹ்விடம் சிறந்தவர் பணிவுள்ளவரே!" என எச்சலனமுமில்லாமல் பதிலளித்தார் அம் மாமனிதர். ■

முஜ்தமஃவிலிருந்து...
பாத்திமா ஹப்ஸா அபூபக்கர், சம்மாந்துறை

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்குப் போக்கு வாழ்வைத் தொலைத்துவிடும்!



எந்த ஒரு வேலையை நாம் செய்யா விட்டாலும் ஏதாவது நொண்டிச் சாட்டுகளைச் சொல்லித் தப்பிவிடுவோம். அதனை ஒரு திறமையாகக்கூட நாம் நினைப்பதுண்டு. சாதாரண வேலைகளில் இவ்வாறு பழகும் நாம், எமது இலட்சியங்கள் தவறவிடப்படுகின்றபோதுகூட அதேபோலவே நொண்டிச் சாட்டுகளைத் தேடி சமாளித்துக் கொள்ளவே விரும்புகிறோம். அத்தகைய சாக்குப் போக்குகள் எமக்கு எத்தகைய பயனையும் தராதது மாத்திரமல்ல, எம்மையே அழித்துவிடக் கூடிய விஷங்கள் என்பதை நாம் அறியாதுள்ளோம் என்பது ஆச்சரியமானது. மனிதனின் குணநலன்களை ஆய்வு செய்த நிபுணர் ஒருவர் பிரசித்தமான 55 சாக்குப் போக்குகளை பட்டியலிட்டுள்ளார். அவற்றில் சில:

எனக்கு நேரம் மட்டும் இருந்திருந்தால்...
எனக்கு நல்ல நேரம் வாய்த்திருந்தால்...
எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியிருந்தால்...
நான் ஓய்வாக இருந்திருந்தால்...

சிலரிடம் இருக்கும் திறமை எனக்கு இருந்திருந்தால்...

இலட்சியங்களைத் தொலைத்தவர்கள் இப்படித்தான் சொல்வார்கள். நாம்கூட பாடசாலையில் ஒரு வேலையைச் செய்யாவிட்டால் எத்தனை போலிக் காரணங்கள் சொல்லி அதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்ப்போம். ஆசிரியர்களிடம் மட்டுமல்லாது பெற்றோரிடமும் பிறரிடமும் இவ்வாறான சிறுபிள்ளைத்தனமான காரணங்களைக் காட்டி எம்மைக் காப்பாற்றிக் கொள்ள முனைவோம். ஆனால், அது எம்மைக் காப்பாற்றுவது போல் தோன்றினாலும் எமக்கு நாமே குழி தோண்டிக் கொள்வதே! எமது செயல்களுக்கு நியாயம் கற்பிக்க முற்பட்டு நாம் அடுக்கிக் கொண்டு போகும் சாக்குப் போக்கு பட்டியலை எம்மிடமிருந்து துடைத்தெறிய வேண்டும்.

சாக்குப் போக்கு சொல்ல மாட்டேன் என முடிவெடுங்கள்

புளோரன்ஸ் சாட்விக், ஆங்கிலக் கால்வாயை இரு திசைகளிலும் கடந்த முதல் பெண். 34வது வயதில் அமெரிக்காவிலுள்ள காட்டலினா தீவிலிருந்து கலிபோர்னியா கடற்கரையைக் கடக்க விரும்பினார்.

1952, ஜூலை 4ம் திகதி காலையில் தனது இலட்சியம் ஈடேற அலைகளை எதிர்த்து நீந்திக் கொண்டிருந்தார். கடல்நீர் பனிக்கட்டியைப் போல கடும் குளிராக இருந்தது. துணைக்காக அருகில் வரும் படகுகளே தெளிவாகத் தெரியாதளவு பனி மூட்டம் மறைத்திருந்தது. பனி மட்டுமா, கடலின் சுறாக்கள்கூட அவரைத் தாக்க விரைந்தன. கடலில் நீந்தலாம். ஆனால், கடும் குளிரையும் சுறாக்களையும் எதிர்த்து நீந்துவது என்றால்...!

சுறாக்களை எதிர்த்துப் போராடியவர், பனியின் முன் தோற்றுப் போகிறார். கரையை அடைய வெறும் அரை மைல் தூரமே இருக்கும்போது தூரமறியாமல், "என்னைத் தூக்குங்கள்... என்னைத் தூக்குங்கள்..." எனக் கூறிவிட்டார்.

அவர் குளிரிலிருந்து தனது உடலை விடுவித்து இயல்பு நிலைக்குத் திரும்பவே பல மணி நேரமானது. அப்போது அவரைச் சூழ இருந்த பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்: "நான் நீச்சலை முடிக்காததற்கு ஒரு சாக்குப் போக்கும் சொல்லவில்லை. ஆனால் நான் கரையை மாத்திரம் கண்டிருந்தால் கரையை அடைந்து சாதித்திருப்பேன்."

நம்பிக்கை தளராத அந்த மங்கை இரண்டு மாதங்களின் பின்னர் சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதிந்து விட்டார். காட்டலினா கால்வாயை முதலில் கடந்த பெண் என்ற சாதனை மட்டுமல்ல, ஆண்களின் சாதனையைக் கூட இரண்டு மணி நேர வித்தியாசத்தில் முறியடித்து விட்டார் சாக்குப் போக்கு சொல்ல விரும்பாத அப் பெண்மணி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களின் வண்ணங்கள்

ஏ.ஆர். அஹ்மத் ரிலா, தரம்: 05,
குறுக்குத்தலை மு.ம.வி
குறுக்குத்தலை

ஏ.ஆர். றுக்ஸானா,
குறுக்குத்தலை மு.ம.வி
குறுக்குத்தலை

எம்.என்.எப். ஸுமையா, தரம்: 06
கே/தெஹி/காராகொடை மு.ம.வி
எட்டியாந்தோட்டை

மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவர்களின் வண்ணங்கள்

எம். அஹ்னாப், தரம்: 05

என் மிஸ்கா, தரம்: 04

எம். ஹனான், தரம்: 03

எஸ். பிராஸ், தரம்: 05

எம்.எப்.ஆர். ஹஸ்னா, தரம்: 04

எச். ஹமாஸ், தரம்: 03

எம்.ஆர். ஸியா, தரம்: 03

ஆர். நாஸிப், தரம்: 05

எம். ஏ.எம். ஹிமாஸ், தரம்: 03

ஏ.என்.ஏ. நவீத், தரம்: 03

எப். சஸ்னிதா, தரம்: 03

இறுதித் திகதி
20.05.2012

அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு: **தொழிலாளர் தினம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மாணவர்களே...!

உங்கள் அறிவுக்கு விருந்தளிக்கும்
சிறுவர் கலைக்களஞ்சியம்
வெளிவந்துவிட்டது.

ஆஃபாக்

சிறுவர் கலைக்களஞ்சியம்

அரபு, ஆங்கிலம், உருது, ஜேர்மன், நோர்வே ஆகிய மொழிகளில் சர்வதேசத்தில் பிரபலம் பெற்ற ஆஃபாக் சிறுவர் கலைக்களஞ்சியம் இப்போது தமிழில்...

சர்வதேச தரத்தில் உலகைம் தழுவிய தகவல்களை உங்கள் கைகளிலும் சிந்தனையிலும் தவழச் செய்ய இன்றே வாசியுங்கள்...

AFAQ
சிறுவர் கலைக்களஞ்சியம்

- ஒவ்வோர் இதழிலும் ஒவ்வொரு தனித் தலைப்பு
- முழுமையான தகவல்கள்...
- தரமான தாளில்... 8 பக்கங்களில்...
- தரமான அச்சுப் பதிப்பு...
- எளிய தமிழ்...
- பல்வர்ண சித்திரங்கள்...

விலை ரூபா
50.00
மட்டுமே



கிடைக்குமிடங்கள்:

ISLAMIC BOOK HOUSE
77, Dematagoda Road,
Colombo - 09

JMF
77, Dematagoda Road,
Colombo 09, Tel: 011 2698771, 0777412561

Contect: T. Musthaq - 0777 396 306

INSIGHT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org